Registered as a Newspaper பக்கங்கள் 10 விலை: ரூபா 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆவணி 18 [03-9-1993] வெள்ளிக்கிழமை ஓசை 197

## யாழ்.பல்கலை. நூல்கள் கொழும்பில் கையாடல்!

யாழ். பல்கலைக் கழகத்திற்குரிய இரண்டு இலட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த நூல்கள் கொழும்பில் கையாடல் செய்யப்பட்டுள்ளது. யாழ். பல்கலைக் கழகம் பிரிட்டனிடமிருந்து கொள்வனவு செய்த நூல்களே இவை. இந் நூல்கள் கொழும்பில் தபால் திணைக்கள பொதிஅறையிலிருந்து கையாடப்பட்டுள்ளன. பெறுமதி மிக்க மருத்துவ, வர்த்தக முகாமைத்துவ துறைசார் நூல்கள் இவற்றில் அடங்கும். 1990 ஆம் (10ஆம் பக்கம் பார்க்க)

# குடத்தனைகரையில் விமான குண்டுவீச்சு!

## மீன்பிடி படகுகள் நாசம்

[வடமராட்சி]

வடமராட்சி கிழக்கு குடத்தனைப் பகுதியில் சிறிலங்கா விமானப் படை விமானங்கள் நேற்றுநண்பகல் பலத்த குண்டு வீச்சை நடத்தின. இக்குண்டு வீச்சுத் தாக்குதலில் இரு குண்டு வீச்சு விமானங்களும் ஒரு அவ்ரோ விமானமும் ஈடுபட்டன. இருதடவை மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலில் எட்டு குண்டுகள் வீசப்பட்டன. பல மீன்பிடிப்படகுகள் இதனால் நாசமடைந்தன.

குடத்தனை பொற்பதிப் பகுதியில் சிறிலங்கா குண்டுவீச்சு விமானங்கள் மேற்கொண்ட எட்டு குண்டுகளுக்கு கடற்கரையோரப் பகுதியில் கட்டி விடப்பட்டிருந்த மீனவர்களது படகுகள் சில சேதமடைந்தன.

நேற்றுபகல் 12.20 மணிக்கு பலாலி இராணுவ முகாமிலிருந்து ஒரே அணியாக உலங்குவானூர்தி ஒன்றுகுண்டு வீச்சு விமானங்கள் இரண்டு, அவ்ரோ விமானம் ஒன்றுமாக விமானங்கள் மேற்குறித்த பகுதிக்குவந்தன உலங்குவானூர்தி வட்டமிட்டு நோட்டமிட்ட பின்னர் பொம்மர்விமானங்கள் மாறி மாறி நான்கு குண்டுகளை வீசின.

பின்னர் பலாலிக்குச் சென்ற விமானங்களில் அவ்ரோ விமானம் தவிர மற்றைய விமானங்கள் மீண்டும் அப்பகுதிக்கு 1.40 மணிக்கு வந்து மேலும் நான்கு குண்டுகளை வீசின இரண்டாவது தடவையாக வந்த விமானங்கள் பருத்தித்துறை பகுதியை பல தடவைகள் வட்டமிட்டு விட்டு குடத்தனைக்கு கரையோரப் பகுதியாக வந்து குண்டுகளைவீசின.

மேலும் அவ்ரோ விமானம் ஒன்று பிற்பகல் 3 40 மணிக்கு பொற்பதிக் கடற்பகுதிக்கு வந்து மூன்று தடவைகள் அப்பகுதியை வட்டமிட்டு நோட்டமிட்டு விட்டு பலாலிப்பகுதியை நோக்கி சென்று மறைந்தது.

## கடற்புலிகளுக்கு அஞ்சியதால் இந்திய மீனவர் மீது தாக்கு

[கொழும்பு]

பருத்தித்துறைக் கடற்பரப்பில் இந்தியமீன்பிடி இழுவைப் படகு மீது நேற்று சிறிலங்கா கடற்படையினர் தாக்குதல் நடாத்தி படகு ஒன்றை மூழ்கடித்துள்ளனர்.

கரும்புலிகளின் படகு என்று கருதியே இந்திய மீன்பிடிப் படகுமீது தாக்குதல் நடத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

''முத்துக்குமார்'' என்ற மேற்படி மீன்பிடி இழுவைப் படகு மூழ்கடிக்கப்பட்டதால் ஒரு இந்திய மீனவர் உயிரிழந்துள்ளார். மேலும் மூன்று மீனவர்கள் காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

மீட்கப்பட்ட இந்தியமீனவர்களை அடையாளம் காணுவதற்கு தமக்கு உதவும்படி இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகம் தமிழ்நாடு அரசைக் கேட்டுள்ளது.

காயமடைந்த மீனவர்கள் தற்பொழுது வடபகுதி இராணுவ மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருவதாக கூறப்படுகிறது.

## கடற்படை படகு கடும்பீரங்கித் தாக்குதல்

(வடமராட்சி)

வடமராட்சி கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினரின் விசைப்படகு ரோந்துச் சேவை நேற்றுபகல் அதிகரித்திருந்தது.

ரோந்து சென்று கொண்டிருந்த விசைப்படகு ஒன்று வல்வெட்டித்துறையில் காலை 7.30 மணிக்கு மீனவர்களை நோக்கி கடும் ஷெல் தாக்குதலை மேற்கொண்டது. இதனையடுத்து மீனவர்கள் கடலில் குதித்து கரைக்கு வந்து சேர்ந்தனர்.

பகல் 12. 10 மணியளவிலும் இப்பகுதிக் குடியிருப்பு நோக்கி கடற்படையினர் தாக்குதலை மேற்கொண்டனர். ஒரு மணியளவில் பலாலி இராணுவ முகாமிலிருந்து தொண்டமானாறு பகுதியை நோக்கியும் ஆட்லறி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் பருத்தித்துறை பகுதிக்கு மேலாக ஒரு விமானம் நோட்டமிட்டுச் சென்றதும் குறிப்பிடத்தக்கது.(யோ)

## அளம்பிலில் புக்காரா இருமுறை குண்டுவீச்சு

(முல்லைத்தீவு)

அளம்பில் பகுதியில் நேற்று முன்தினம் இரு புக்காரா விமானங்கள் கடும் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தியுள்ளன. நேற்றுமுன்தினம் காலை 10.00 மணியளவில் அளம்பில் கிராமம்மீது இரு புக்காரா விமானங்கள் ஐந்து குண்டுகளை வீசின.

பின்னர் பிற்பகல் 2 00 மணிக்கும் அளம்பிலில் புக்காரா விமானங்கள் இரு குண்டுகளை வீசின. இத்தாக்குதலினால் ஏற்பட்ட சேதவிபரங்கள் தெரியவரவில்லை.

ஈரப்பெரியகுளம் படையினரால்

## வடபகுதி வந்த லொறி தடுத்துவைக்கப்பட்டது

(வவுனியா)

வடபகுதி வந்த லொறி ஒன்று வவுனியா ஈரப்பெரிய குள இராணுவத்தினரால் தடுத்துவைக்கப்பட்டுள்ளது. லொறிச்சாரதியான நல்லூரைச் சேர்ந்த இ. சற்குணம் என்ப (10 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு நகரப்பகுதியில் பாதுகாப்பு திடீர் அதிகரிப்பு

(கொழும்பு)

கொழும்பு நகரிலும் சுற்றுப் புறங்களிலும்திடீரென பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. வீதிகளில் இராணுவத்தினரும் பொலிசாரும் நிறுத்தப்பட்டுள்ளனர். வாகன அனுமதிப்பத்திரங்களும் ஆள் அடையாள அட்டைகளும் படையினரால் பரிசோதிக்கப்படுகிறது.

இதனிடையே நேற்று கூட்டுப்படை தலைமையகம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் நகரில் இந்த படையினரின் சோதனை நடவடிக்கைக்கு ஒத்துழைக்கும்படியும் சந்தேகமான நபர்களையோ பொருட்களையோ கண்டால் உடனடியாக பாதுகாப்புப்படையினருக்கு அறிவிக்கும்படியும் கேட்டுள்ளது.

## சேவையில் நீடிக்குமாறு ஹமில்டனுக்கு பணிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் 18ஆம் திகதி தனது 60ஆவது வயதையடையவுள்ள கூட்டுப்படைத்தலைமையக தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவை மேலும் ஒரு வருடத்திற்கு இராணுவத்தில் பணியாற்றுமாறு அவரை ஜனாதிபதிடி.பி விஜேதுங்க பணித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னதாக இவ்வருடம் ஹமில்டன் இராணுவ சேவையிலிருந்து ஒய்வுபெறுவார் என்றும் அவுஸ்திரேலியாவிற்கு என சிறிலங்கா தூதுவராக செல்வார் என்றும் செய்திகள் வெளியானது தெரிந்ததே.

## சமாதான திட்டம் எதுவும் வழங்கப்படவில்லை

(லண்டன்)

இனப்பிரச்சினை சம்பந்தமான சமாதான தீர்வை அமைச்சர் தொண்டமானிடம்தாம் வழங்கியதாக வெளியான செய்திகளை பாரிஸில் உள்ள விடுதலைப் புலிகளின் பிரமுகர் திலகர் மறுத்துள்ளதாக பி.பி.ஸி தெரிவித்தது,

திலகர் தெரிவிப்பு

இனப்பிரச்சினை தொடர்பாக அமைச்சர் தொண்டமானுடன் தாம் பேசியபோதிலும் தீர்வுத் திட்டம் எதையும் வழங்கவில்லை என அவர் கூறினார்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கு

## குற்றஞ்சாட்டப்பட்ட 21பேர் நீதிமன்று வர மறுப்பு

[சென்னை]

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட எதிரிகளில் சுமார் 21பேர் நீதி மன்றத்துக்கு சமுகமளிக்காமல் நீதிமன்றத்தை பகிஷ்கரித்து வருகின்றனர்.

குற்றம் சாட்டப்பட்ட 26 பேரில் 21பேர் நீதிமன்றத்தை பகிஷ்கரித்து வருவதால் மேற்படி வழக்கு விசாரணை இம் மாதம் 8ஆம் திகதிவரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

சிறையில் மேற்படி கைதிகளைப் பார்வையாளர்பார்க்க வரும் இடத்தில் கம்பி வலை தடுப்பாக வைக்கப்பட்டிருந்தது. இதனூடாக பார்வையாளர்கள் கைதிகளுக்கு சயனைட் போன்ற பொருட்களை வழங்காமல் தடுப்பதற்காக அதை அகற்றி விட்டு பைபர் கிளாஸ் கண்ணாடி தற்பொழுது பொருத்தப்பட்டுள்ளது. இதைஎதிர்த்து இக்கைதிகள் நீதிமன்றத்தை புறக்கணித்து வருகின்றனர்.

அதேவேளை மேற்படி விசாரணையில் தனக்கு நம்பிக்கை இல்லை என்றும் எந்த தண் [10ஆம் பக்கம் பார்க்க]

## லொறியில் குண்டுவெடித்து இரு சிப்பாய்கள் பலி

புனானை முகாமில் சம்பவம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள புனானை இராணுவ முகாமில் நேற்று முன்தினம் ஏற்பட்ட வெடி விபத்தில் இரு இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டதுடன் மேலும் ஆறு இராணுவத்தினர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் 4பேர் இராணுவத்தினருக்கு உதவ அமர்த்தப்பட்டிருந்த பொதுமக்கள் என்று கூறப்படுகிறது. லொறி ஒன்றில் வெடிகுண்டுகளை ஏற்றிக் கொண்டிருக்கும் போது மேற்படி குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது. லொறி மூலம் மேற்படி முகாமில் இருந்து வேறொரு முகாமுக்கு வெடிகுண்டுகளை ஏற்றிச்செல்வதற்காக அவை லொறியில் ஏற்றப்பட்டுக் கொண்டிருந்த போது இச் சம்பவம் இடம்பெற்றது.

## குமாரி காங்கேசனில்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு துறைமுகத்திலிருந்து புறப்பட்டு வந்த குமாரி கப்பல் காங்கேசன் துறை துறைமுகத்தில் தரித்து நிற்பதாக தெரிவிக்கப்பட்டது.

பொருள்களுடன் வந்துள்ள இக் கப்பல் இன்னமும் பருத்தித்துறை துறைமுகத்தை வந்துசேரவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. [தி]

## புலிகள் விமானம் தயாரிக்கின்றனராம்

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் விமானம் ஒன்றைக் கட்டி வருவதாக சிறிலங்கா விமானப்படையின் உள் தகவல்களை மேற்கோள் காட்டி சண்டேரைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

சுட்டு வீழ்த்தப்பட்ட விமானம் ஒன்றை முல்லைத்தீவுக்குப் படகின் மூலம் எடுத்துச் சென்று, அதன் பாகங்களை இணைத்தே புலிகள் அந்த விமானத்தைக் கட்டுவதாக சிறிலங்கா விமானப்படைத் தரப்பில் கூறப்படுகின்றது.

விமானப் படையினர் வடக்கில் தாக்குதல்நடத்திய இலக்கு ஒன்றில் அந்த விமானம் வெள்ளோட்டம் பார்க்கப்பட்டது. ( 10ஆம் பக்கம் பார்க்க )

# வரி விளம்பரம்


### ஒரு இல்லத்தில் சில உள்ளங்கள்

ஐம்பத்தி ஐந்து ரூபாவுக்கு உள்ளத்தைத் தொடும் உணர்ச்சிகரமான ஓர் குடும்ப நாவல் பத்திரிகை, புத்தக விற்பனையாளர்களிடம் கேளுங்கள்? (வியாபாரிகளுக்கு கழிவுண்டு) பூபாலசிங்கம், மகிமிலன், ஸ்ரீகாந் புத்தகசாலைகள் யாழ்ப்பாணம். (5818)

### ஆண்டு 4 பரீட்சை

ஒவ்வொரு சனிக்கிழமையும் பி ப. 3மணிக்கு நடைபெறும். தொடர் பயிற்சிப்பரீட்சையின் 8-வது பரீட்சை 04 09. 93 (நாளை) சனிக்கிழமை நடைபெறும். வினாத்தாள் பெற்றுக் கொள்ளலாம். எடிசன் அக்கடமி யாழ் இந்து அருகில் கே கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். (5817)

### அதிர்ஷ்டசாலிக்கு அழகிய கைக்கடிகாரம்

எமது ஸ்தாபனத்தில் மணிக்கூடு, றேடியோக்கள் சேவிஸ் செய்யும் வாடிக்கையாளர்களின் பற்றுச்சீட்டு இலக்கங்கள் ஒவ்வொரு மாத முடிவிலும் அதிர்ஷ்ட இலாபச்சீட்டிழுப்பு மூலம் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு அதிர்ஷ்டசாலிக்கு அழகிய Casio கைக்கடிகாரம் பரிசாக வழங்கப்படும். "டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி 7339)

### தேவை

சிறிய குடும்பத்திற்கு சமையல் வேலை தெரிந்த வீட்டுப் பணியாள்தேவை.ஆண்/பெண் இருபாலாரும் அண்மையில் கிடைக்கப்பெற்ற நற்சான்றுப் பத்திரங்களுடன் நேரடியாக சமூகம் தரவும் இல, 10, பழைய பூங்காவீதி சுண்டுக்குளி (ஓல்ட்பார்க் ஓடலுக்கு அருகில். சம்பளம் நேரடியாக பேசித்தீர்க்கலாம். (சி-7342)

### றெனி மூக்குக்கண்ணாடியகம்

உங்கள் கண்களை பரிசோதித்துச் சரியாக கண்ணாடி வழங்கப்படும் இல. 288, நாவலர் வீதி (யாழ். தனியார் வைத்தியசாலைக்கு முன்பாக) ஆனைப்பந்தி யாழ்ப்பாணம் (5786)

### பதவி வெற்றிடம்

யாழ்நகரின் மத்தியில் இயங்கி வரும் முன்னணி உணவகத்திற்கு மேலைத்தேய கீழைத்தேய, சைனீஸ் உணவுவகைகள் சிற்றுண்டிகள் தயாரிப்பதில் அனுபவம் உள்ளவர்களும், மற்றும் உணவு பரிமாறுவதில் அனுபவம் உள்ளவர்களும் தேவை. நற்சான்றுப் பத்திரங்கள் அனுபவ சான்றிதழ்களுடன் நேரில் வரவும் தொடர்பு சுவையருவி, யாழ்ப்பாணம். (சி-7292)

### மதுப்பிரியர்களே!

உங்களுக்கு ஓர்புதியஉலகம்! புதுமை - இனிமை - அனைத்தும் நிறைந்த "மதுச்சாலை" 812 ருத்திரத்துறை வீதி. [முத்திரைச் சந்தை] யாழ்ப்பாணம். [5820]

### குருசெவ்வாய் யோகை தீய சேர்க்கை

சனி ராகுகளின் கெட்ட பார்வைகளால் 08. 09 1993 முதல் 15 நாட்களுக்கு உலகிற்கு பாரிய கெடுதல்களை உண்டாக்கும் இங்கும் புத்தபிதிபே. [ஜோதிட விஞ்ஞான கணிப்புகளுக்கு: நேரிலே சந்திக்கலாம்] "சத்யா" கட்டுடை. [5821

### வீடு காணி விற்பனைக்கு

அல்வாய் தெற்கு, குமிழடிப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் கிணறு, வீட்டுடன் காணி மூன்று பரப்பு 9½ குழியும், அருகில் வெற்றுக் காணி இரண்டு பரப்பு பதினைந்து குழியும் விற்பனைக்கு உண்டு தொடர்பு:- அ. காசிப்பிள்ளை துலாவை, அல்வாய் தெற்கு. அல்வாய் [5778]

---

ஜோ. எகட்டனின்

ஜெசித்தாராவின்

## உணவுப் பார்சல்கள்

காலை 11-30 மணி முதல் பகல் 3-00 மணி வரை கிடைக்கும்.

மீன் / இறைச்சி ரூபா 30/-

மரக்கறி ரூபா 25/-

மாணவர்களுக்கு விசேட சலுகை

எல்லாவிதமான உணவு ஓடர்களும் கவனிக்கப்படும்.

**ஜெசித்தாரா**

சுண்டுக்குளி மகளிர்கல்லூரி முன் ஒழுங்கை கண்டுகுளி

[சி-7345]

---

நாவலர் கல்விக் கழகம்

## ஆண்டு-4

புலமைப் பரிசில் பரீட்சை (1994)

புதிய வகுப்பு ஆரம்பம்

02-09-1993

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். [சி-7303]

---

## யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி பொன்விழா ஆண்டின்

# கல்விக் கண்காட்சி

தலைவர் : திருமதி இ. நாகராசா, அதிபர்.

காலம் : 04-09-1993 காலை 9.00 மணி

இடம் : கல்லூரி மண்டபம்

### நிகழ்ச்சி நிரல்

1 தேவாரம்.
2. வரவேற்புரை.
3. பிரதம விருந்தினர் உரை : பேராசிரியர் எஸ் வி. பரமேஸ்வரன். தலைவர் உடற்றொழிலியற்றுறை, மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்.
4. சிறப்பு விருந்தினர் உரை : திரு. வெ. பொ. பாலசிங்கம், ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்.

பிரதம விருந்தினர் கண்காட்சியைத் திறந்து வைப்பார்

காலம் : 4, 5, 6. 7, 8ஆம் நாட்கள் செப்டம்பர் மாதம் 1993

நேரம் : காலை 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணி வரை

4. 5 ஆம் நாட்கள் : யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவிகள்.
6. 7. 8ஆம் நாட்கள் : பிற பாடசாலை மாணவர்கள், ஆர்வலர்கள்.

உயர்தர வகுப்பும், ஆண்டு 6 முதல் ஆண்டு 11 வரை

- விஞ்ஞானம்
- கணிதம்
- வர்த்தகம்
- கலை
- சமூகக்கல்வி
- அழகியற்கல்வி
- தொழில்நுட்பம்

தொடர்பான கல்விக் கண்காட்சி

அனுமதிக் கட்டணம் : ரூபா 5.00

பாடசாலை மாணவர்கள், ஏனைய மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள் மற்றும் ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பொன்விழாச் சபையினர்.

அன்பளிப்பு:

**வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்**

[சி-7341]


---

## 31-ம்நாள் நினைவு அஞ்சலி 03-09-93 (வெள்ளிக்கிழமை)



தோற்றம் 02-10-1918

மறைவு 04-08-1993

குப்பிளானைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் சுன்னாகத்தை வதிவிடமாகக் கொண்டவரும் ஓய்வு பெற்ற துறைமுக கூட்டுத்தாபன உத்தியோகத்தருமான

அமரர்

## அப்புக்குட்டியர் நல்லையா

03-09-93 இன்று எமது இல்லத்தில் நடைபெறும் இந்நிகழ்விலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்

சுன்னாகம் மேற்கு, சுன்னாகம். மனைவி மக்கள், மருமக்கள் பேரப்பிள்ளைகள்.

(5823)

---

## நினைவு கூறுகின்றோம் ... 1993-09-03

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் மட்டு-புதூர் திமிலதீவில் சிறிலங்கா அதிரடிப்படையினர்மேற்கொண்டசுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய,

டயஸ் (இங்கிலி யேசு ராஜ்குமார்-வலைபிறவு-மட்டு)

வில்லியம்/நீராஜ் [அ சாத்வீகன்-புன்னைச்சோலை-மட்டு]

தீசன் [- ஜெ. தீஸ்வரன் - புதூர் - மட்டு]

தமிழீழக்கடற்பரப்பில் [யாழ் மாதகலுக்கு வடக்கே] சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

லெப்.சுதர்சன் [வைத்திலிங்கம் ஜீவானந்தன்-புன்னாலைக் கட்டுவன் தெற்கு-யாழ்]

குயிலன் [இராசரத்தினம் ரவீந்திரன்-நாவலடி, அல்வாய் -பருத்தித்துறை]

1988ஆம் ஆண்டு கிளிநொச்சி, வட்டக்கச்சிப்பகுதியில் இந்தியப்படையினர்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

லெப்.சீலன் [கணேசபிள்ளை நாகேந்திரன்- ஒட்டுமடம்- யாழ்]

1989ஆம் ஆண்டு யாழ்-அளவெட்டிப்பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

வித்தியா [விநாயகமூர்த்தி வித்தியாதரன்-நாகவல்தோட்டம், அளவெட்டி-யாழ்]

மன்னாரில் தேசவிரோதசக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட பள்ளிமுனையைச்சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்.

யாழ்ப்பாணத்தில் இந்தியப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட வல்வெட்டித்துறை தெணியம்பையைச் சேர்ந்த தமிழ் மூதாட்டி.

1990ஆம் ஆண்டு யாழ்-கோட்டைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலின்போது விழுப்புண் அடைந்திருந்து வீரச்சாவெய்திய,

2-ம் லெப்.பெனா [கிறிஸ்தோப்பர் கிளீற்றஸ் நிர்மலன் - இல, 31-மன்னார்]

இதேபகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

பாபு [ஐயம்பெருமாள் ஜெயக்குமார்-ஊறணி, காங்கேசன்-துறை-யாழ்]

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட செங்கலடி கொடுவாமடுவைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்,

தமிழீழக கடற்பரப்பில் [பருத்தித்துறை] தமிழகம் நோக்கிச் சென்று கொண்டிருந்த இடம்பெயர்ந்தோர் படகின்மீது சிறிலங்காக்கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட 68 தமிழர்கள்,

1991ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

ஜேம்ஸ் [— — மட்டுநகர்]

ஜமால் [பவித்துரை பாலசிங்கம் - பங்குடாவெளி-மட்டு]

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினர் மற்றும் தேசவிரோதசக்திகள் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

லெப்.லக்ஸ்மன் [தியாகராசா வரதராஜன் - ஆரையம்பதி 01 -மட்டு]

1992ஆம் ஆண்டு கைதடி வடக்கு தவரத்தில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட விபத்தில் எமைப்பிரிந்த,

2 ம்லெப். விழி [விமலேஸ்வரி சங்கரப்பிள்ளை-ஏழாலை மேற்கு-யாழ்]

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

[சி/7338]

# திசை மாறிய நிக்கரகுவா புரட்சி

**பாலகுமாரன்**

சென்ற யூலை 21-ம்திகதி நிக்கரகுவாவின் வரலாற்றில் கறைபடிந்தநாளாகி விட்டது. 8வயது சிறுமியான கரோலினா விபரீதமான முறையில் உயிர் துறக்கவும் இந் நாள் காரணமாகி விட்டது ஏன் எனில் அன்று தான் நிக்கரகுவாவின் மாகாண தலைநகரங்களுள் ஒன்றான எஸ்ரேலியில் 150இற்கு மேற்பட்ட சான்டினிஸ்ரா (Sandinista) இராணுவத்தைவிட்டு விலகிய வீரர்கள் முன்னாள் மேஜர் ஒருவர் தலைமையில் பெரும் கலகம் விளைவித்தனர். 60,000 மக்கள் வதியும் எஸ்ரேலி நகரை தமது கட்டுப்பாட்டில் கொண்டுவர முனைந்த இவர்கள் அங்கிருந்த வங்கிகளை முதலில் கொள்ளை அடித்தனர். இவர்களை முறியடிக்க நிக்கரகுவாவின் சான்டினிஸ்ரா ஜெனரல் கம்பேர்டோஒட்டேகா (Humberto Ortega) தலைமையில் இயங்கும் இராணுவம் பெரும் படை எடுப்பையே நடாத்த வேண்டி இருந்தது. முன்னாள் - இன்னாள் சான்டினிஸ்ரா வீரர்கள் மோத வேண்டிய நிலை இங்கேற்பட்டது. இம் மோதலின் போது சிறுமி கரோலினா கடுமையான தனது புற்றுநோய்க்காக சிகிச்சை பெறும் மருத்துவ மனைக்குள் புகுந்த கிளர்ச்சிக்காரர்களிற்கும் அரச இராணுவத்தினரிற்கும் கடும் துப்பாக்கி மோதல் ஏற்பட்டது. அப்போது கரோலினாற்கு உயிர்வாயு முகக்கவசத்திற்கு ஊடாக செலுத்தப் பட்டுக் கொண்டிருந்தது. துப்பாக்கிச் சூட்டினால் உயிர் வாயு தீப்பற்றி பெரும் சேதம் விளைவிக்கும் என அஞ்சிய தாதி கரோலினாவிற்கு உயிர் வாயு செலுத்துவதை நிறுத்தவே கரோலினா சில நிமிடங்களிற்குள் இறந்தாள். யார் வந்தார்கள்? யார் தாக்கினார்கள்? எதற்கு? ஏன்? என் இற வினாக்கட்கு விடைகாண முடியாமல்மருத்துவமனை ஊழியர்கள் குழம்பினர். ஏனெனில் மோதுண்ட இரு சாராரிற்கும் தோற்றத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கவில்லை கடுமையாக ஒடுக்கப்பட்ட இம் மோதலில் 40க்கும் மேற்பட்ட முன்னாள் இராணுவத்தினரும் பல குடிமக்களும் கொல்லப்பட்டனர். மிகக்கடுமையான முறையில் இதனை அடக்கியதாக ஜெனரல் ஒட்டோகா மீது சான்டினீஸ்ரா கட்சியினரே கண்டனம் தெரிவிக்கும் விந்தையும் நடந்தது. ஏன் எனில் ஒட்டேகா சகோதரர்களுள் ஒருவர்நிக்கரகுவா இராணுவத் தளபதி. மற்றவர் டானியல் ஒட்டேகா எதிர்க்கட்சி தலைவர்.

இரண்டு வருடத்திற்கு மேலாகவே நிக்கரகுவாவின் நிலை குழப்பகரமானதாக படிப்படியாக மாறி வருகின்றது. முன்னாள் கொன்றா (Contra) கிளர்ச்சியாளர் ஒருபுறம், அரச இராணுவத்திலிருந்து வெளியேற்றப்பட்டோர் ஒருபுறம், இன்னும் ஆயுதம் தாங்கிய சிறிய குழுக்கள் என நிக்கரகுவாவில் இவை செய்யும் கடத்தல். கொலைகள் அதிகரித்த வண்ணமேயுள்ளன. இவற்றின் உச்சமாகவே சென்ற வாரம் கடத்தல், எதிர்க்கடத்தல்என்கிற நாடகமும் அரங்கேறியது. நிக்கரகுவாவின் வட மலைப் பகுதியில் இயங்கும் முன்னாள் கொன்றா கிளர்ச்சியாளர் சிலர் அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்த சென்ற குழுவினரை சிறைப்பிடிக்க (இதில் சான்டினிஸ்ரா கட்சி நாடாளுமன்ற உறுப்பினரும் இருந்தனர்) முன்னாள் சான்டினிஸ்ரா போராளிகள் அரச தரப்பினர் சிலரை மாற்றாக பணயம் வைக்க மீண்டும் உள்நாட்டுப் போரின் விளிம்புக்கு நிக்கரகுவா சென்றது. எனினும் கிறிஸ்தவ மதகுரு கார்டினல் ஒபான்டோ பிராவோ (Obando Bravo) முயற்சியால் நிலைமை சீரானது ஆனால் முன்னாள்சான்டினிஸ்ரா ஆதரவாளரிற்கும் அமெரிக்க உதவியோடு மோதிய கொன்றாகிளர்ச்சியாளரிற்கும் இடைப்பட்ட மோதலின் பக்க விளைவான இன்றைய நிலை உடனடியாகத் தீரவும் வாய்ப்பு இருப்பதாக தெரியவில்லை.

1989 இறுதிப் பகுதியில் நிக்கரகுவாவில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் எவரும் எதிர்பாராத முறையில் FSLN எனப்படும் டானியல் ஒட்டேகாவின் தலைமையிலான சான்டினிஸ்ரா விடுதலை முன்னணி தோற்றுப் போயிற்று. அப்போது அமெரிக்க மறைமுக ஆதரவோடு வலதுசாரி கட்சியைச் சேர்ந்த வயலோற்றா சமோரோ அம்மையார் (Violeta Chamorro) சனாதிபதியானார். பதவியேற்ற இவரிற்கு நிக்கரகுவாவின் இராணுவம், காவல்துறை முழுமையாக சான்டினிஸ்ரா கட்சியின் கட்டுப்பாட்டில் இருந்தமை பெரும் நெருக்கடியைக் கொடுத்தது. இதிலிருந்து மீள்வதற்காக சமோரோ அம்மையார் வேறு வழியில்லாது கம்போட்டோ ஒட்டேகாவை இராணுவத் தளபதியாக ஏற்க நேரிட்டது. இச்செயலை இன்று வரை மன்னிக்க விரும்பாத அமெரிக்க அரசு கொன்றா கிளர்ச்சியாளரிற்கான உதவியை நிறுத்திய போதும் சமோரோ அம்மையார்க்குமுன்னர் வாக்குறுதி கொடுத்தது போல் உதவ முன் வராததால் நிக்கரகுவா பொருளாதாரம் இன்று பெரும்நெருக்கடிக்குள் உள்ளது. 60 வீதம் வேலையில்லை, கீழ் உழைப்பு நிலவும் நாட்டில் வறுமை காரணமாக பல குழப்பங்கள் ஏற்படத் தொடங்கிவிட்டன. 1990-ம் ஆண்டு சமோரோஅம்மையார் பதவிக்கு வந்த பின் கொன்றா கிளர்ச்சியாளரோடு அமெரிக்க உதவியால் ஓர் உடன்பாட்டிற்கு வந்த அம்மையார் ஆயுதங்களை ஒப்படைத்து கொன்றா படையை கலைக்கச் செய்தார். அதேசமயம் முன்னாள் கொன்றா அணியினரிற்கு வேண்டிய வகையில் நிலங்கள், வேலைவாய்ப்புக்கள். வீட்டு வசதிகள், நிதிஉதவி போன்ற வசதிகள் வழங்கப்பட்டு அவர்கள் இயல்பு வாழ்க்கை முறைக்கு திரும்ப வழி வகுக்கப்படும் என உறுதி அளிக்கப்பட்டது. அது போலவே ஒரு இலட்சத்திற்கும் மேலாக இருந்த சான்டினிஸ்ரா இராணுவத்தினரின் தொகையிலும் பெரும் வெட்டு விழுந்தது. இன்று 15,000 இராணுவத்தைக் கொண்டதாக தொகை குறைக்கப்பட்டு விட்டது. இவ்வாறு வெளியேற்றப்படுவோர்க்கும் வேண்டிய பொருளாதார உதவிகள் செய்யப்படும் என்ற உறுதி வழங்கப்பட்டது. ஆனால் இன்று இருபகுதியுமே கொடுத்த வாக்குறுதிகள் காப்பாற்றப்படவில்லை எனப் போர்க்கோலம் பூண்டுள்ளனர். கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றும் நிலையில் இன்று அரசு இல்லை. எனவே எத்தனையோ தடவைகள் மன்னிப்பு வழங்கப்பட்டாலும் ஆயுதங்களைக் கைவிட முன்னாள் புரட்சியாளரும், முன்னாள் கிளர்ச்சியாளர்களும் மறுத்து வருகின்றனர். எனவே கொன்றா கிளர்ச்சியாளரைக் கடுமையாக ஒடுக்குவது போலவே முன்னாள் இராணுவத்தினரையும் கலகம் விளைவிக்கும்போது அடக்க வேண்டிய நிலை கம்போட்டோ ஒட்டேகாவிற்கு ஏற்பட்டுள்ளது.

அதேசமயம் முன்னாள் கொன்றா கிளர்ச்சியாளரோ சமோரோ அம்மையார் ஆட்சியில் உள்ள சான்டினிஸ்ராக்களின் செல்வாக்கு முற்றாக ஒழிக்கப்பட வேண்டும் என்றும், தளபதி ஒட்டோகா பதவி விலக்கப்பட வேண்டும் என்றும் வேறு கோரி வருகின்றனர். தருணம் பார்த்திருந்த அமெரிக்காவோ சமோரோ அம்மையாரின் அரசிற்கும் சான்டினிஸ்ரா கட்சிக்கும் இடையே உள்ள தந்திரோபாய உறவை அறுத்தாலேயே உதவி என்கிறது. உறவை அறுத்தால் ஆட்சி செய்யமுடியாது. இது அம்மையாரின் நிலை. இப்போது புதிதாக வேறு நெருக்கடி ஒன்று உருவாகி உள்ளது சென்றமாதம் நிக்கரகுவாவின் நிலத்தின் கீழ் மறைவிடமொன்றில் பெரும் தொகை ஆயுதங்கள் காணப்பட்டன. இவை எல்சல்வடோர் புரட்சியாளருக்குரியது என்ற சில ஆவணங்களும் அங்கு காணப்பட்டன. இதனைச் சாட்டாக வைத்துக் கொண்டு சான்டினிஸ்ரா இராணுவம் பயங்கரவாதிகளிற்கு உதவி செய்கிறது என்ற கோசத்தை முன் வைத்து மேலும் மேலும் நிக்கரகுவாவிற்கு உதவிகளை முற்றாக நிறுத்த கிளிங்டன் நிருவாகம் முடிவு செய்யப் போவதாகத் தெரிகின்றது. இவ்வாறு இன்று எல்லாவகையிலும் தொல்லைகட்கு உள்ளாகும் நிக்கரகுவாவின் எதிர்காலம் இவ்வாறு ஆகும் என எவரும் எதிர்பார்க்கவில்லை. இதனால் 1996-ம் ஆண்டு நடைபெற வேண்டிய தேர்தல் முன்கூட்டியே நடாத்த நேரிடலாம் எனவும் கருதப்பட்டது.

நிக்கரகுவாவிற்கு இப்படியானதொரு நிலை எவ்வாறு உருவானது? பலராலும் சீரணிக்க முடியாத கேள்வி இது. ஏன் என்றால் 1979 யூலை 19-ம் திகதி சான்டினிஸ்ரா தேசிய விடுதலை முன்னணி (FSLN) சோமோசா குடும்ப ஆட்சியை தூக்கியெறிந்து நிக்கரகுவா புரட்சியை நிகழ்த்தியபோது உலகமே மகிழ்ந்தது; ஆரவாரித்தது. புகழ் பூத்த புரட்சி அப்போது உலகெங்கும் உள்ள தேசிய விடுதலை இயக்கங்கட்கு முன்னோடியாக, உந்து சக்தியாக, பல பாடங்களைப் புகட்டுவதாக அமைந்தது. இன்னொரு கியூபாவைப் போலல்லாது இரண்டாவது சிலியாக மாறாமல் டானியல் ஒட்டேகா தலைமையில் ஒரு புதிய தனித்தன்மை வாய்ந்த பாதையில் நிக்கரகுவா அடியெடுத்து வைத்தது. ஆரம்பகால தவறுகள் சிலவற்றை சிலியிலும் கியூபாவிலும் கற்ற நிககரகுவா உடனடியாக மேற்குலகின் அரசியல் நிராகரிப்பிற்கு உள்ளாகாமல் தேவையற்ற வகையில் முதலாளிய வர்க்கத்தோடு மோதாமல் பொருளாதார தனிமைப்படுத்தலிற்கு உள்ளாகாமல் தவிர்க்க முனைந்து செயற்பட்டபோது உலகமே வியந்தது ஆனால் 1990-ம் ஆண்டுபொதுத் தேர்தலில் FSLN தோற்றபோது பெரும் அதிர்ச்சியே மிஞ்சியது. இது எவ்விதம் நிகழ்ந்தது? என்பது இன்னமும் முழுமையாகவிடையளிக்கப்படாத வினாவாகவே உள்ளது.

ஏன் என்றால் ஸ்பெயின் நாட்டின் அடிமைத் தன்மையிலிருந்து விடுபட்ட பின் அமெரிக்க வல்லாண்மைக்குள் சிக்கிய தனது தாயகத்தை விடுவிக்க விரும்பி 1920களில் பெரும் தேசிய விடுதலை இயக்கம் ஒன்றை கெரில்லாப் போராட்ட அடிப்படையில்கட்டியெழுப்பிய தீரன் அகஸ்டோ சீசர், சான்டினோ வழியிலே FSLN அமைப்பு1961இல்உருவாக்கப்பட்டது, 1934-ம்ஆண்டளவில் பேச்சுவார்த்தைக்என மனோகுவாவுக்கு அழைத்து இரகசியமாக சாண்டினோவை கொன்ற பின்னே சோமோசா குடும்பத்தால் 1936 இல் ஆட்சிக்கு வரமுடிந்தது. அடுத்த 43 வருடகால கொடுங்கோன்மைக்கு எதிராக சான்டினோவின் வழியில் போராடியசான்டினிஸ்டுக்கள் தோற்கடிக்கப்பட்டது சோகத்திற்குரிய விடயமே. ஏனெனில் சான்டினோ ஒரு அரசியல் சித்தாந்த வாதியல்ல. நாளாந்த நடைமுறை அனுபவங்கட்கு ஊடாக தன்னை வளர்த்துக் கொண்டு தனது கொள்கைகளை நெறிப்படுத்தி ஒரு பெரும் இராணுவத் தலைவனாகவும் ஈற்றில் தேசியத் தலைவனாகவும் உருவெடுத்தவர் அவர்.

எனவே 1967ஆம் ஆண்டு 60 போராளிகள் கொண்டு அயல் நாடான கொண்டுராசின் எல்லையில் இயங்கிய இவர்கள் ஈற்றில் 15,000 இற்கு மேற்பட்ட போராளிகளைக் கொண்டு 1979 புரட்சியை 30 இலட்சம் நிக்கரகுவா மக்கட்காக நிகழ்த்த முடிந்தது.

நிக்கரகுவா புரட்சியின் பிரதான அம்சம் அது தன்னை எந்தவொரு சித்தாந்தத்தோடும் பிணைக்காமல் பரந்துபட்ட சனநாயக அமைப்புக்களை இணைத்த கூட்டமைப்பாகச் செயற்பட்டமையே. "நாங்கள் எந்தச் சூழ்நிலைப் புரட்சியை உயர்அறிவு மயமாக்கக் கூடாது" என இன்று மிஞ்சியிருக்கும் FSLN ஆரம்பகால உருவாக்கிகளில் ஒருவரான தோமஸ் போர்க்(Tomas Borge) அடிக்கடி குறிப்பிடுவார். சூழ்நிலைக்கு ஏற்ப பொதுவுடமைக்கருத்துக்களை பயன்படுத்தினர். பரந்துபட்ட தேசிய சனநாயக முன்னணியில் தேசிய உணர்வுள்ள முதலாளிய வருக்கம் தீவிரவாத கருத்துடைய மதகுருமார் என பல தரப்பினரையும் இணைத்த புரட்சி. இது புரட்சியின் பின் பல கிறிஸ்தவ குருமார் அரசியலில் அமைச்சர்களாகவும், உயர் அதிகாரிகளாகவும் அங்கம் வகித்தனர். 1979இன் பின் உருவாக்கப்பட்ட உயர் அதிகார பீடத்தில் வலதுசாரி தேசியக் கட்சியினர் இடம்பெற்றிருந்தனர்.

ஏன், இன்று சனாதிபதியான வயலற்றோ சமோரோவும் அன்று இவ்உயர்பீடத்தில்அங்கம் வகித்தவர்தான். சனநாயக ஒற்றுமையின்சின்னமான அரசு என்றே நிக்கரகுவா அரசு அன்றுஅழைக்கப்பட்டது. அது மட்டுமன்றி மக்கட்கு நன்மை பயக்கும் வகையில் உலகமே வியந்து நிற்க மக்களின் கல்வி, வாழ்க்கைத்தர உயர்விற்கு பல முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. இவைஎல்லாம்பற்றிப் போற்றிப் புகழ்ந்து ஆய்வு செய்து அன்று நூற்றுக்கணக்கான நூல்கள் மேற்குலகத்தாலே வெளியிடப்பட்டன.

ஆனால் இவை எல்லாம் நிசமில்லை. இரண்டொரு வருடம் செல்ல அமெரிக்க தூண்டுதலின் பிற்போக்கு வலது சாரிச் சக்திகள் அரசிலிருந்து வெளியேறி உடனடியாக தேர்தல் வேண்டும் என பெரும் அரசியல் இயக்கத்தை நடாத்தினர். சோமோசாவால் கொலை செய்யப்பட்டதன்னுடைய கணவனின் பத்திரிகைகளை 'லாபிரான்சா 'La Prensa' பிற்போக்கு சக்திகளின் குரலாக சமோரோ அம்மையார் மாற்றினார். கொண்டுராவில் முன்னர் சோமோசாவால் 5000இற்கும் மேற்பட்ட தேசிய காவல் படையினர் ஒன்று சேர்க்கப்பட்டு ஆயுதம் வழங்கப்பட்டு கொன்றா கிளர்ச்சிக்காரர் ஆக மாற்றியமைக்கப்பட்டு நிக்கரகுவாவில் பெரும் நாசம் விளைவிக்க அமெரிக்க சி. ஐ. ஏ முழுமூச்சாக செயல்பட்டது. பொருளாதாரத்தடை வேறு. இவ்வாறாக 1980 பின் பத்தாண்டுகளுக்கும் ஒரு உள்நாட்டுப் போரின் நெருக்கடி நிலைக்கு மக்கள் முகம் கொடுத்தனர். பெரும் பணம் போரிற்கு செலவாயிற்று. இதற்கு இடையில் FSLN அமைப்பிலும் பிளவுகள் ஏற்பட்டு முன்னாள் தளபதிகள் பலர் எதிர் புரட்சியாளரானர். புற அழுத்தங்களால் 1990 தேர்தல் நடாத்த வேண்டியதாயிற்று. எதிர்க்கட்சிகளே பதவிக்கு வந்தால் உள்நாட்டுப் போரும் தவிர்க்கப்படும். பெரும் பொருளாதார உதவியும் கிட்டும் என ஆசை காட்டின. இக்கட்சிகளுக்குப் பெரும் தொகைப் பணம் பிரசாரத்திற்காக சி. ஐ ஏ, வழங்கியது. 10வருட துயரம் மக்களை தடுமாற வைத்து பயன் ஆட்சிமாற்றம். ஆனால் இன்றளவும் மக்கள் வாழ்வில் மாற்றம் இல்லை. நிலைமை முன்னரை விட மோசமாகி விட்டது. எனவே திசைமாறிப் போகும் நிக்கரகுவா புரட்சியின் முன்னைய பாடங்களை இன்றுஎதிர்மறையாக நோக்கும் அபாயமே மிஞ்சி இருக்கிறது. எனினும் சான்டினிஸ்ரா இன்னமும் எதிர்காலம் இருப்பதாகவே தெரிகின்றது. எனவே எதிர்காலத்தை அவர்கள் இனி எவ்வாறு கையாள்வார்கள் என்பது நாம் பொறுத்திருந்து பார்க்க வேண்டிய விடயமே

## உடல் கோளாறுகளை காட்டும் எம். ஆர். ஐ

நியூகிளியர் மார்னடிக் ரிசோனன்ஸ் இமேஜிங் [எம். ஆர். ஐ ] என்னும் சாதனம் ஜப்பானிய ஆஸ்பத்திரிகளில் உண்டு. ஒரு மனித உடலில் தலை முதல் கால் வரை குறிப்பாகத் தலைப் பகுதியில் எந்த விதமான குறையிருந்தாலும் உடன் காட்டிக் கொடுக்கும். இந்த சாதனத்தில் நோயாளியைப் படுக்கச் செய்தால் சில வினாடிகளில் குறைபாடுகளைக் காட்டிக் கொடுத்து விடுகிறது.

இந்த எம்.ஆர்.ஐ. சாதனம் இன்றைய 'ஸ்கானரை' விட நவீனமானது. இது மருத்துவத்துறையில் முக்கிய பங்களிப்பினை வழங்குகின்றது.

சென்ற வாரத் தொடர்ச்சி

# தமிழர் திருமணமும் சீதனமும்

திருமணத்தின் பின்பு நடைபெறும் இல்வாழ்க்கை 'கற்பு' என்ற பெயரால் வழங்கியது 'கற்பு' என்பதற்குப் பரிமேலழகர், வாழ்க்கைத் துணையாகிய மனையாளின் உள்ளத்தில் உண்டாகும் 'கலங்கா நிலைமை' எனப் பொருள் கொள்வார். (இக்காலத் திருமணச் சடங்கிலே அம்மி மிதித்தல், மணப்பெண்ணின் உள்ளம் பிற ஆடவனை விரும்பாது கொண்டவனையே கல் போல உறுதியாகப் பற்றி நிற்பதற்கு அடையாளம் என்றும், 'அருந்ததி பார்த்தல்' அவள் கற்பரசியான அருந்ததி போலத் தன் மணவாளனுக்கு உண்மையாக இருத்தல் வேண்டும் என்பதற்கு அறிகுறி என்றும் விளக்கப்படுகின்றன.) 'ஒருத்திக்கு ஒருவன்' என்ற ஏகபத்தினி விரதமே 'கற்பு' என்பதற்குத் தமிழரிடையே நிலவி வந்த கருத்து என்பதைச் சங்க நூல்களும் உறுதி செய்கின்றன. மருதத்திணை பற்றிய பாடல்களிலே தலைவன் பரத்தையிடம் சென்று திரும்பி மனைவியின் ஊடலுக்கு உள்ளாவது, 'அன்பின் ஐந்திணை'யாக அன்றைய தமிழரால் ஏற்கப்பட்டமையே 'ஒருவனுக்கு ஒருத்தி' என்ற கற்பொழுக்கம் பேணப்படாமைக்குச் சான்றாகும். தலைவனுக்குரிய பண்புகளில் ஒன்றாக வீரயுககாலத்தில் அவன் பலபெண்களோடு கூடுவதும் வாழ்வதும் கருதப்பட்டன போலும்!

## மணவினைக் கரணங்கள்

சங்ககாலக் 'களவு' நெறிப்பட்ட வாழ்க்கையிலே சீர்கேடுகள் காலப்போக்கில் ஏற்படத் தொடங்கின 'களவு' நிலையிலேயே காதல் உறவு முறிதல், உடன்போக்கு ஏற்படாமலே இருவரும் பிரிகின்ற அவலம், ஆடவன் பரத்தையரைக் கூடுதல், அதனால் குடும்ப வாழ்க்கை சீர்குலைதல் என்பன பெருகிய நிலையிலே இல்வாழ்க்கையை ஒரு கட்டுத் திட்டத்தினுள் கொண்டு வர வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகின்றது. இதற்கேற்ப சமயக் கிரியை முறைகளும் தமிழரிடையே கலந்து முதன்மை பெறும் நிலை ஏற்படுகின்றது.

பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப.

(தொல்காப்பியம், பொருளதிகாரம், கற்பியல் 143)

என்ற நூற்பா இதனையே புலப்படுத்துகின்றது.

மருதநிலத் தலைவனாகிய நிலவுடமையாளனும் நெய்தல் நிலத்துப் பட்டின வாழ்நனாகிய வணிகனும் பெருஞ் செல்வமும், அது கொண்டு பெறத்தக்க சமூகக் கணிப்பும் பெற்று உயர்நிலை அடைந்தபொழுது அவர்களிடையே நிலவிய ஒழுக்கக் கேடுகளைக் களைந்து நெறிப்படுத்த அக்கினியும் அவையோரும் சாட்சிகளாக வருவிக்கப்படுகின்றனர்; தெய்வத்தின் சாந்நித்தியமும் எதிர்பார்க்கப்படுகிறது. இவற்றின் வெளிப்பாடுகளைச் சிலப்பதிகாரத்திலே விரிவாகக் காணலாம்.

மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்
தீவலஞ் செய்வது காண்பார்கண் நோன்பென்னை
விரையினர் மலரினர் விளங்கு மேனியர்
உரையினர் பாட்டினர் ஒசிந்த நோக்கினர்
சாந்தினர் புகையினர் தயங்கு கோதையர்
ஏந்தின முலையினர் இடித்த சுண்ணத்தர்
விளக்கினர் கலத்தினர் விரிந்த பாலிகை
முளைக்குட நிரையினர் முகிழ்த்த மூரலர்
போதொடு விரிகூந்தற் பொலநறுங் கொடியன்னார்

''காதலற் பிரியாமற் கவவுக்கை ஞெகிழாமல்
தீதறுக'' வாழ்த்தி.....

(சிலப்பதிகாரம், மங்கல வாழ்த்துப்பாடல் 52 — 62)

நடந்த கோவலன் கண்ணகி திருமணத்திலே புதுமையும் பழமையும் ஒன்றிணையும் மணவினை பற்றிய செய்தி கிடைக்கின்றது. மங்கல வாழ்த்துப் பாடலிலே கண்ணகிக்குக் கோவலன் தாலி புனைந்தான் என்பதற்குச் சான்று இல்லை. ஆனால் பிறிதோரிடத்தில், அவன் அவளைப் பிரிந்திருந்த காலத்தில் பிற அணிகலன்களைக் களைந்த நிலையிலும் தனது மங்கல அணியை மட்டுமே அணிந்திருந்தாள் என்ற கூற்றினை நோக்குகையில், மங்கலநாண் பூட்டும் வழக்கமும் சிலப்பதிகார காலத்தில் இடம்பெற்றிருத்தல் வேண்டும் என்ற முடிவிற்கு வரக்கூடியதாய் இருக்கிறது.

அஞ்செஞ் சீறடி அணிகலம் பொழிய
மென்துகில் அல்குல் மேகலை நீங்கக்
கொங்கை முன்றிற் குங்குமம் எழுதாள்
மங்கல அணியிற் பிறிதணி மகிழாள்.

(சிலப்பதிகாரம்: அந்திமாலைசிறப்புச் செய்காதை47-50)

செல்வக்கொழிப்பு மிக்க வணிகரான கோவலன் - கண்ணகி பெற்றோர் கண்ணகிக்கென்று சீதனம் வழங்கவில்லையா என்ற கேள்வி எழுவது நியாயமானதே. இவ்வந் தம்பதியர் இன்பத்தில் திளைக்கவென்று கோவலனின் தாயாகிய பெருமனைக்கிழத்தி செல்வமும் அடிமைப்பரிவாரமும் அமைத்தளித்ததாகச் சிலப்பதிகாரம் இதற்கு விடை தருகிறது. ''சுற்றம் பேணுதல், துறவினரைப் பேணுதல், விருந்தினரைப் பேணுதல், மற்றும் அறச் செயல்களுக்கெனவும், அவற்றால் உயர்ச்சி பெறுவதற்கெனவும் அவற்றைக்கண்டு மகிழ்வதற்கெனவும் இருநிதிக் கிழவனான மாசாத்துவானின் இலலத்தலைவி அடிமைகள் செல்வங்களோடு கண்ணகியைக் கோவலனுடன் தனித்து வாழ வைத்து ......''

(சிலப்பதிகாரம் - மனையறம் படுத்தகாதை 85-88) என்ற பகுதியை இதற்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். ('பேரியற் கிழத்தி' என்பதைப் 'பெருமனைக்கிழத்தி' என்று விரித்து அவள் கோவலன் தாய் என உரையாசிரியர் சொல்கின்றனர். இது

கோவலன் தாயின் இயற்பெயர் அன்று; சிறப்புப் பெயரே. அவ்வாறாயின் அது கண்ணகியின் தாயையும் குறிப்பதாகக் கொள்ளலாம் அது எவ்வாறாயினும் மணமகளுக்கு வழங்குவதாகிய சீதனமே பெருமனைக்கிழத்தி வழங்கியது என்று கொள்வதிலே தவறில்லை.)

திருக்கோவையார் பல்லவர் காலத்தில் எழுந்ததோர் சிற்றிலக்கியம். திருவாசகம் பாடிய மாணிக்கவாசகசுவாமிகள் இயற்றியது. (பல்லவர் காலம் கி.பி 600-900 மாணிக்கவாசகரை கி.பி 8 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலோ 9 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலோ வாழ்ந்தவர் எனக் கொள்வர்) பழைய அகத்திணை மரபு தழுவிப்பாட்டுடைத் தலைவன் இளவிக்தலைவன்தோழி பாங்கன்செவிலித்தாய்நற்றாய் முதலாம் பாத்திரங்கள் கொண்டு நாடகப்பாங்கிலே காதற்செய்திகளோடு பத்தியையும் உணர்த்தி. கட்டளைக் கலித்துறைப் பாவினத்தால் பாடப்பட்ட நானூறு செய்யுள்களால் ஆனது பெண்ணொருத்தியை மணமபேசிச் செல்வோர் அவளுக்குக் காப்பு அணிவதும் பின்பு பொன் அணிவதும் (மணமகன் தரிக்கும் மங்கல நாண் பொன் எனக் குறிக்கப் பட்டிருக்கலாம்) வழக்கம் என்பது பின்வரும் பாடலிலிருந்து தெரிய வருகின்றது.

பாப்பணி யோன்தில்லைப் பல்பூ மருவுசில் லோதியைநற்
காப்பணிந் தார்பொன் னணிவார் இனிக்கமழ் பூந்துறைவ
கோப்பணிவான் தோய்கொடி முன்றில் நின்றிவை ஏற்குழுமி
மாப்பணி லங்கள் முழங்கத் தழங்கும் மணமுரசே

(திருக்கோவையார்-உடன்போக்கு, 196)

இதுவும் சீதனத்தின் ஒரு கூறு என்று கொள்ளத்தக்கதே. இந்தநூற்றாண்டின் நடுப்பகுதிவரை யாழ்ப்பாணத்திலும் மாப்பிள்ளைபக்கத்தார் மணப்பெண்ணுக்குக் காப்பணிவது வழக்கமாய் இருந்தமைக்குச் சான்றுண்டு.

திருத்தொண்டர் புராணத்தினை இயற்றிய சேக்கிழார் கி.பி 10ஆம் அல்லது 11ஆம் நூற்றாண்டினர் எனக் கொள்ளப்படுகின்றார். பெரிய புராணத்திலே காரைக்காலம்மையார் புராணத்தில், அக்காலத் திருமண முறைமைகள் சுருக்கமாகக் கூறப்படுகின்றன. மகட்பிள்ளை பகுதியிலிருந்து மூத்தோர் பெண் வீடு சென்று மணம் பேசல் (மகட்பேசல்), மணவோலை உற்றார், உறவினருக்கு நல்ல நாளிலே அனுப்பல், மாப்பிள்ளை மணத்துக்

## சொக்கன்

கென அலங்காரம்செய்துவரல், பெரியோர் நிறைந்த அவையிலே திருமணம் நிகழல் என்ற பலவும் கூறப்பட்டுள்ளன. மணமகளான புனிதவதியாரின் தந்தை தனதத்தன் தன் ஒரே மகள், மணமகளின் ஊருக்குச் செல்லாதிருப்பதற்காக அவனும் மகளும் வாழ, மாடமாளிகையும் செல்வங்களும் வழங்கிய செய்தி குறிக்கப்படுகின்றது. ('தெளிதரு நான்முறைமை' யாகிய சமயாசாரங்களோடு இத் திருமணம் நடைபெற்றது.)

மங்கலமா மணவினைகள் முடித்தியல்பின் வைகுநாள்
தங்கள் குடிக் கரும்புதல்வி ஆதலினால் தனதத்தன்
பொங்கொலிநீர் நாகையினில் போகாமே கணவனுடன்
அங்கண் அமர்ந்தினிதிருக்க அணிமாடம் மருங்கமைத்தான்

(திருத்தொண்டர் புராணம் - காரைக்காலம்மையார் புராணம்12)

''மகட் கொடையின் மகிழ்சிறக்கும் வரம்பில்தனம் கொடுத்ததன்பின்... ஷெ13)

இலக்கியம் என்பது எதனை முதன்மைப்படுத்த ஆக்கப்பட்டபோதும், அதனூடாக அது தோன்றிய காலத்து வாழ்வியல்களையும் வெளிப்படுத்தும் என்பது உண்மையானால், திருக்கோவையாரும், திருத்தொண்டர் புராணமும் அவை தோன்றிய காலத்திலே திருமணத்தோடிசைந்த பொருட்கொடை வழக்கினையும்கூறியுள்ளன என்றே கொள்ளலாம்.

## பொருள்வயிற் பிரிவு

மேலே காட்டியவற்றிலிருந்து சங்ககாலத்திலே மணமகனாகிய தலைவனே மணமகளுக்குப் பரிசில் வழங்கும் முறைமையும் பிற்காலத்தில் இது 'பரிசம்' எனப்பட்டது.) தொடர்ந்து வந்த காலத்தில் மணமகனின் அல்லது மணமகளின் பெற்றோர் அவளுக்குக் கொடை வழங்கும் முறைமையும் நிலவியமைக்குச் சிலசான்றுகள் தரப்பட்டன.

சங்ககாலத் தலைமகன் தன் அன்புக்குரிய தலைவிக்கு பரிசுகள் வழங்கி, அவளோடு இல்லறத்தைத் தொடங்க முன்னர் செல்வம் தேட செல்வது 'வரைவிடை வைத்து பொருள்வயிற் பிரிவு' எனப்பட்டது. மணமான பின்பும் அவன் பல கடமைகளைச் செய்ய வேண்டியிருந்தது. அவற்றை நிறைவு செய்யவும் பொருள் தேட வேண்டிய இன்றியமையாமை அவனுக்கு ஏற்பட்டது. இது 'பொருள் வயிற் பிரிவு' என அழைக்கப் பட்டது.

அரிதாய அறன்எய்தி அருளியோர்க் களித்தலும்
பெரிதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும்
புரிவமர் காதலிற் புணர்ச்சியும் தருமெனப்
பிரிவெண்ணிப் பொருள்வயிற் சென்றநங் காதலர்

கலித்தொகை, பாலைக்கலி 11 (1-4)

இவ்வாறு பொருள் தேடுவதற்கெனத் தலைவன் பிரிந்து செல்வதால் தலைவ, தலைவியரிடையே ஏற்படும் பிரிவு வேதனையும், அவன் செல்லும் வழியில் எதிர்நோக்க நேர்ந்த அவலங்களும் அகத்திணையிலே 'பாலை' என்ற பகுப்பில் 'பிரிதல்' என்ற தலைப்பில் மிகுந்த சோகப் பாடல்களாய்ப் புலவர்களால் வெளிப்படுத்தப்படுகின்றன. தலைவன் திரும்பிவராதவிடத்து, அவனுக்குச் சாவு நேர்ந்துவிடக் கூடிய சூழ்நிலையிலே அநாதையாகிவிடும் தலைவியின் எதிர்காலம் என்ன? அவளின் பொருளாதார நிலைப்பாடு என்ன? இவை பற்றித் தலைவன் பகுதியாரிலும் தலைவி பகுதியாரான அவளின் பெற்றோரே மிகுதியும் சிந்திக்க வேண்டியவர்களாயினர். இந்த அடிப்படையிலே பிற்காலத்தில் சீதன வழக்கம் ஏற்பட்டிருக்கலாம் என்பது, ஊகமேயன்றி, அதுதான் இவ்வழக்கத்திற்கு அடிப்படை என்பதை நிறுவ மேலும் ஆழமான ஆய்வுகள் நிகழ்த்தப்படல் வேண்டும்.

## ஈழத்திலே திருமணமும், சீதனமும்

ஈழத்திலே தமிழ்மக்கள் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலேயே வாழத் தொடங்கிவிட்டனர் என்பதற்கு இன்று வரலாற்றாய்வாளர் பல சான்றுகளைக் கண்டுபிடித்துள்ளனர் எனினும் அக்காலத்தில் ஈழத்தில் எழுந்த தமிழிலக்கியங்கள் என்று 'ஈழத்துப் பூதந்தேவனார்' என்ற சங்ககாலப் புலவர் ஒருவரின் பாடல்களை தவிர வேறு எவையும் கிட்டவில்லை. (அவர் பாடல்கள் அகநானூறு, குறுந்தொகை நற்றிணை ஆகிய சங்க இலக்கிய நூல்களிலேயே தொகுக்கப்பட்டுள்ளன) கி.பி பதின்மூன்றாம் நூற்றாண்டிலே எழுதப்பட்ட சரசோதிமாலை என்ற சோதிட நூலே எமக்குக் கிடைக்கும் முதலாவது ஈழத்துத் தமிழ் நூல். இதன் பின்னர் தோன்றிய செகராசசேகரம், பரராசசேகரம் ஆகிய நூல்களுஞ் சரி, தட்சண கைலாச புராணம், இரகுவமிசம் முதலாம் நூல்களுஞ் சரி, கோணேசர் கல்வெட்டு, சிவராத்திரி புராணம், திருக்கரைசை புராணம் என்பனவும் சரி ஈழத்தவரின் திருமணநடைமுறைகள் பற்றியோ சீதன வழக்குப் பற்றியோ எவ்வித செய்தியையும் தரவில்லை.

ஒல்லாந்தர் தொகுத்த தேசவழமையிலேயே இச் செய்திகளுக்கான சான்றுகள் உள்ளன. சாதிப்பாகுபாடுகள் சமயாசாரத் திருமணங்கள் சீதன வழக்கம் என்பன இதன் உள்ளடக்கத்தில் ஒரு பகுதியாகும். தேசவழமைச்சட்ட அடிப்படையிலே எழுதப்பட்ட ஓர் உறுதி (Deed) யின் வாயிலாகச் சீதனம் பற்றிய செய்தியை எடுத்துக்காட்டாகத் தருகிறேன். ''கோப்பாய்வேளாளன் குமாரருடையார் பெண் வள்ளியம்மை பேரில் யாழ்ப்பாணப் பட்டினத்துள்ள அரசாங்க அலுவலகத்தில் 4-4-1812லும் பின்னரும் மூன்று ரூபா முத்திரை பதித்துப் பதிவுசெய்து அனுமதிக்கப்பெற்ற அடிமைச் சீட்டுகளிற் காணப்படும் அடிமையாட்களுள் மூன்றிலொரு பகுதியினர் சிதம்பரவம்மையாருக்குச்சீதனமாகக் கொடுக்கப்பட்டனர்.''

(கு. முத்துக்குமாரசுவாமிப் பிள்ளை - குமாரசுவாமிப்புலவர் பக்.8).

பெண்ணுக்குச் சீதனமாக நிலம், பணம், ஆடை அணிகள் மட்டுமன்றி அடிமைகளையும் வழங்கும் கொடிய வழக்கம் ஆங்கிலர் காலத்தில் [1844 இல்] ஒழிக்கப்பட்டது. சென்ற நூற்றாண்டில் சீதனம் கோலோச்சியமைக்கு, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களின் [1822-1879] பின்வரும் கூற்றும் பொருத்தமான எடுத்துக்காட்டே. ''இத்தேசத்திலே பலவகைத் தொழில்கள்செய்து சீவனஞ் செய்யச்சத்தியுடையவர்களும் அவை செய்யாது சோம்பேறிகளாய் இருந்துகொண்டு அநேகர் நாணமின்றிப் பலவிடத்தும் சென்று யாசித்தும் அநேகர் தம்மனைவியர்களுடைய சீதனப் பொருளையே கொண்டும் அநேகர் தாவரசங்கமங்களாகிய தாயத்தையும் சீதனத்தையும் ஈடுவைத்தும் விக்கிரயம் செய்தும் சீவனஞ் செய்கிறார்கள். அறிவும் ஆண்மையும் மானமும் உடையவர்கள் இப்படிச்செய்வார்களோ?

[நான்காம் பாலபாடம்
செல்வம்
[தமிழ் ஆண்டு 10-பக் 23]

சிறுகதை

# சடங்கு

சசிகரன்

"அம்மா" "அம்மா' என அவசரமாக குரல்கொடுத்தபடி சைக்கிளை நிறுத்திய மோகன் வேகமாக தாயின் படுக்கையறையை நோக்கி விரைந்தான்.

நோயின் பிடியில் சிக்கி கட்டிலே தஞ்சம் எனக் கிடக்கும் அந்தத் தாய் தலையை சற்று உயர்த்தினாள். வாசற்புறத்தை நோக்கி அவளது பார்வை திரும்பியது.

கண்களிலிருந்து நீர் சொரியாதபோதும் ஏதோ குழப்பம் அவனது முகத்தில் அப்பிப் போயிருந்ததை அவள் உணர்ந்துவிட்டாள் போலும்.

"என்னடா என்ன நடந்தது?" என்று அவள் கேட்டபோதே குரலில் தளதளப்பு தென்பட்டது. "சொல்லு மோனை, எனக்கு என்னவோ மாதிரிக்கிடக்கு சொல்லுராசா" எனக் குரல் கொடுத்தபோதே அவளது கை நீண்டது. அவனை அன்புடன் வருடிக் கொள்வதற்காக எழுந்திருக்க அவள் சிரமப்படுவதை உணர்ந்த மோகன் அவளது படுக்கையின் ஒரு ஓரத்தில் போய் அமர்ந்துகொண்டான்.

"அம்மா! சும்மா படபடக்காதையுங்கோ. உனக்கு ஒன்று நடந்திட்டால் பிறகு நான் என்ன செய்கிறது- நீ சும்மா தொட்டதுக்கெல்லாம் பதறிக்கொண்டிருந்தா" அவன் கூறிக்கொண்டே சென்றதை அவள் இடைமறித்தாள்.

"உன்ரை முகமும், கண்ணும் ஒரு மாதிரிக் கிடக்கு என்ன நடந்தது. ஏன் ஒரு மாதிரி இருக்கிறாய்" என்ற அவளது கேள்வியை அடுத்து மோகன் தன்னை சுதாகரித்துக் கொண்டான்.

"அதொண்டுமில்லை. உங்கடை அண்ணர் மூச்சு விட மறந்து போனாராம்" என்றான் சாதாரணமாக, அவளது முகமாறுதல்களை அவதானித்தபடி.

உண்மையாயோ, எப்ப, எப்படி, என்று ஒரே மூச்சில் அவள் பல கேள்விகளைத் தொடுத்தாள். துக்கம் அவளது தொண்டைக்குழியை கட்டிக் கொண்டிருக்க வேண்டும்.

"என்னணை ஏதோ உடன் கட்டை ஏறப்போற மாதிரிக் கிடக்கு உன்னைப் பார்த்தா இப்ப எத்தினை சனம் துடிக்கப் பதைக்க சும்மா வீணாய் சாகுதுகள் அங்காலை போனால் ஷெல் ... இங்காலை போனால் பொம்மர் எண்டு. இந்த நேரத்தில் பூமிக்கு பாரமாய் சும்மா இருக்கிறவை போனால் என்னணை. போகட்டும் நீபதறாமல் இரணை" மோகன் கூறிக்கொண்டிருந்தான் விச்ராந்தியாய்.

"தம்பி... டேய்... அண்ணர் எப்படாசெத்தவர்" என்றாள் சற்று உரத்த தொனியில்.

எனக்கு அதொண்டும் தெரியாது. நான் அதாலை வரேக்கை பார்த்தன். அவற்றை படலேக்கை நாலைந்துபேர் நிண்டு அந்தரப்பட்டுக் கொண்டிருந்தினம். அப்பதான் சைக்கிளை ஸ்லோ பண்ணினன். பொன்னையா வாத்தி செத்துப் போச்சு எண்டு அவையள் கதைச்சது கேட்டுது. நான் நைசா இங்காலை வந்திட்டன்.

"என்னடா ஒரு கவலையும் இல்லாமல் உப்பிடிச் சொல்லுறாய். உன்னை தொட்டிலில் போட்டு வளர்த்த தாய்மாமன்எல்லேயேடா.பக்கிற சனம் என்னடா சொல்லும். ஒருக்காப் போய் பார்த்திட்டு வந்திருந்தா என்ன குறைஞ்சே போயிடும். நாளைக்கு எனக்கு ஒண்டெண்டாலும் இப்பிடித் தான் செய்வியே."

"என்னணை! இருந்தாப் போல சகோதர பாசம் பொத்துக் கொண்டு வருகுது. சகோதர பாசம் துடிக்குதோ. இப்ப எத்தின நாளா இந்தக் கட்டிலே தஞ்சமென்று படுத்த படுக்கையாய் கிடக்கிறாய். ஒரு நாள்... ஒரே ஒரு நாள் தன்னும் வந்து எட்டிப்பார்த்தவரோ உன்ரை உடன்பிறப்பு இந்தப் படலையைக் கடந்து எத்தினை நாள் போய் வந்திருப்பார். புருசனும் இஞ்சை இல்லாமல் தனிய இருக்கிறாளே. என்ன ஏது என்று எப்பவாலும் எட்டித்தன்னும் பார்த்தவரோ. ஒண்டும் தரக்கிர வேண்டாம். எட்டிப்பார்க்கக்கூட அவருக்கு மனம் வரேலை. அப்பிடிக்கொத்தவருக்காக இவ துடிக்கிறவாம் துடிப்பு பேசாமல் கிடவணை"

"தம்பி! டேய் நான் சொல்லுறன் எண்டு கோவியாதை"

"எனக்கு சும்மா விசரைக் கிளப்பாதையணை. நீ என்ன சொல்லப் போகிறாய் எண்டு எனக்கு நல்லாத் தெரியும். ஆனா அவர் ஒண்டில்லை மூண்டு ஆம்பிளைப் பிள்ளையளைப் பெத்தவர். எங்களை விட வசதியாய் வாழ்ந்தவை அவைக்கு என்ன குறைச்சல் இருந்தது. பணத்துக்கு ஆசைப்பட்டு ஓண்டுக்குப்பின்னாலை ஒண்டாய் எல்லாப் பிள்ளையளையும் வெளிநாட்டுக்கு அனுப்பிப்போட்டு விலாசம் அடிச்சுக் கொண்டு திரிஞ்சவர் என்னட்டப்பணம் இருக்கு. காலுக்குமேல் கால்போட்டுக் கொண்டு இருந்து சாப்பிடுவன் எண்டு கெப்பர் அடிச்சவர்.

தேவையான காசு அனுப்புறம்... கடையில் போய் சாப்பிட்டிட்டு சந்தோஷமாய் இருங்கோ. ஆரும் சொந்தக்காரர் எண்டு அவயளின்ரை வீடுகளுக்குபோய் சாப்பிட்டு சும்மா ஒரு சொல்லுக்கும் இடம் வைக்க வேண்டாம். எண்டு அவருக்கு மகனவை கடிதத்துக்கு மேல கடிதம் எழுதினவையாம். சுந்தரம் கடையில பாண் வாங்கின என்னைக் கண்டிட்டு குத்தலாய்-எனக்கு கேக்கிற மாதிரி பெரிய குரலில் தன்ரை சினேதர் மாருக்கு சொல்லுறார்." மோகன் கறுவிக் கொண்டான்.

"அந்தஆள் அவங்கள் எழுதினதை சொல்லியிருக்கும். நீ ஏன் அதை உன்ரை தலயில தூக்கிப் போடுறாய்" என்றாள் அவள்.

'ஓமோம்...இஞ்சை நானும் ஒருத்தன் இருக்கிறன் எண்டு அவங்கள் மூண்டு பேருக்கும் தெரியுமோ இல்லையோ. ஒரு கடிதமாவது போட்டிருக்கலாம் தானே. அவைக்கு அவ்வளவு திமிர். அவையின்ரை பணத்திமிர் அவையளோடை எனக்கென்ன நீ எழும்பணை சாப்பிடுவம்சரியாப்பசிக்குது.'

"காலமை வெள்ளெணப் போகோணுமெண்டிட்டு அவசரத்தில சமைச்சது. கறியள் எப்பிடிக் கிடக்கோ தெரியாது." என எண்ணியவாறே தாயைப் படுக்கையிலிருந்து நிமிர்த்தினான்.

"நீபோய் சாப்பிடு. எனக்குப்பசிக்கேல்லை. நான்பேந்து சாப்பிடுறன்" என்றவள் கஷ்டப்பட்டுபடுக்கையில் மெல்லச் சாய்ந்து கொண்டாள்.

"எனக்குத்தெரியும். உனக்கு ஏன்பசிக்கேல்லை எண்டு. அவ்வளவு பாசப்பிணைப்பு. அந்தாள் நிம்மதியாய் மண்டையைப்போட்டிட்டுது. நீ ஏன் கிடந்து தவிக்கிறாய். நீயும் சேர்ந்து போகப்போறியே"

"தம்பி! நான் சொல்லுறதைக் கேள். ஆரெண்டாலும் நல்லதுக்குச் சொன்னால் போகாமல் விடலாம். அது குறையில்லை. ஆனால் செத்தவீடெண்டா சொல்லாட்டியும் போக வேணும். அதுதான்ரா பண்பு. எங்களுக்குள்ளை ஆயிரம் பிரச்சினை இருக்கலாம். ஆனா மற்றவைக்கு பல்லுக்குப் பதமாய் இருக்கக்கூடாது. உனக்கு உண்மையாய் என்னில பாசம் இருந்தா நான் சொல்லுறதைச்செய். கடைசியாய் அவனை ஒருக்கா பாத்திட்டு வருவம். என்னை ஏத்திக்கொண்டு போ"

"உனக்கு என்னணை பிடிச்சிருக்கு. டொக்டர் என்ன சொன்னவர். கட்டிலை விட்டு இறங்கக்கூடாது எண்டு. நான் விசரன் மாதிரி நீயே தஞ்சம் எண்டு கிடக்கிறன் இங்கை?" அவனது கேள்வியில் சூடு இருந்தது. குசினிக்குள் நுழைந்தான். அவசரம் அவசரமாக சாப்பாட்டைப்போட்டு விரல்களை சோற்றினுள் புதைத்தான். விம்மல் சத்தம் கேட்டது திடுக்குற்று நிமிர்ந்தான். தாயின் கண்களிலிருந்து கண்ணீர் பெருகிக்கொண்டிருந்தது.

"அப்பா விட்டிட்டுப்போன போதுகூடகண்கலங்காத இந்த அம்மா மாமா செத்துப்போனதுக்கு இப்பிடி அழுவா என்று அவன் கற்பனை கூடப்பண்ணியிருக்கவில்லை."

தன்னைச் சுதாகரித்துக் கொள்ள அவனுக்குச் சிறிது நேரம் பிடித்தது. சாப்பாட்டுத் தட்டை மேசையிலே அவன் வைத்த விதம் தாயைத் திடுக்குறச் செய்தது.

"நீ வரவேண்டாம் அம்மா உனக்காக நானே போய் நிண்டிட்டுவாறன்" குரல் உறுதியாகவெளிப்படஅவனது கால்கள் சைக்கிளை நோக்கி நகர்ந்தன.

நீண்ட பல வருடங்களாக அந்த வீட்டுவாசல்படியை மிதிக்காததால்போலும் அவனது கால்கள் படலையைக் கடந்து உள்ளே சென்றபோதும் உள்ளே போகத்தயங்கின. கால்கள் இரண்டும் பின்னலிட்டுக் கொண்டன.

"வா தம்பி வா" எங்கை வராமல் போயிடுவியோ எண்டுதான் யோசிச்சுக்கொண்டிருந்தன்" என்று பெருங்குரலில் கூறி வரவேற்றார் பரமசாமி வாத்தியார்.

"ஆராருக்கு சொல்ல வேணும் எண்டும் தெரியேல்லை துடக்கு உரித்துக்காரர் ஆரார் எண்டும் தெரியாது" என்றும் அவரே தொடர்ந்தார்.

"பொன்னையா என்னோடை கதைக்கேக்கை எல்லா விசயமும் இங்கை வாடகைக்கு இருக்கிறவையிட்ட சொல்லி வைச்சிருக்கிறன் எண்டு சொன்னார். ஆனா இப்ப அவை எல்லாரும் கையை விரிக்கினம்" என்று கூறிக்கொண்டே போனவர் சற்றுத் தாமதித்து மோகனின் முகத்தையே ஒரு தடவை உற்றுப் பார்த்தார்.

"பெட்டி எடுக்க வேணும் கிரியைகள் செய்ய வேணும... என்னட்டையும் இப்ப எண்டு கையில மடியிலயும் ஒண்டுமில்லை. இந்த மனிசன் என்னட்டை எண்டாலும் ஏதன் தந்து வைச்சிருக்கலாம்" என்றார் கைகளைப் பிசைந்து தலையைத் தொங்கப் போட்டபடி.

"காசுதானே வேணும் மாஸ்டர், அது பிரச்சினை இல்லை" என்றான் மோகன் நிதானமாக.

பரமசாமியர் விறைத்துப் போய் நின்றார்.

"அம்மாவுக்கு ஏதும் நடந்தாலும் எண்டு கொஞ்சக் காசு சேர்த்து வைச்சிருக்கிறன். அதோட அம்மாவுக்காக மூண்டு சில்லு சைக்கிள் வாங்களண்டும் கொஞ்சக்காசுகடன் பட்டனான் அதுதும் கிடக்கு" எனக்கூறிய மோகன்,

"நீங்கள் மற்றதுகளை கவனியுங்கோ... நான்காசோடை வாறன் மாமாவின்ரை அலுவலை முதலில முடிப்பம்" என்றவன் சைக்கிளுக்குதாவினான். மோகன் திரும்பி வரவும் குளிப்பாட்டப்பட்ட பொன்னையா வாத்தியாரின் சடலம் பட்டுவேட்டி சால்வை உடுத்தி வரவேற்பு கூடத்தில் கட்டிலில் வைக்கப் படவும் சரியாக இருந்தது.

ரெடிமேட்டாய் தரக்கொட்டகை முற்றத்தில் வந்து குந்தியிருந்தது. வாடகைக்கதிரைகளால் கொட்டகை நிரம்பி வழிந்தது.

பரமசாமியரை இரகசியமாய் கூப்பிட்ட மோகன், "இந்தாங்கோ இதை வைச்சு செய்யுங்கோ, ஒரு அவசர அலுவல் கிடக்கு செய்து போட்டு ஒரு அரை மணித்தியாலத்தில வாறன்" என்றபடி விரைந்தான்.

பரமசாமியரின் கைகளில் ஆயிரம் ரூபாவுக்கான பச்சை நோட்டுக்கள் சில பளபளத்தன. அதிலிருந்த ஆடும்மயிலின் தோற்றத்தையா அல்லது மோகனின் பெருந்தன்மையையாஅவர் வியந்துநிற்கிறார் என்பதை சரியாக ஊகிக்க முடியவில்லை.

"இந்தாணை சாப்பிடணை இன்னும் கொஞ்ச நேரத்தில கொண்ணர் வெளிக்கிடப்போறார். நான் போகோணும் கெதியா சாப்பிடணை' மோகன் தாயாருக்கு சாப்பாட்டை எடுத்துக் கொடுத்தான்.

"தம்பி...தம்பி..." என்ற அவசர அழைப்புக்கேட்டு மோகன் திரும்பினான்.

"தம்பி...எல்லா வேலையும் முடிந்தது, இன்னுமொரு முக்கிய வேலைதான் இருக்கு அது தான் உன்னட்டை..." பரமசாமியர் இழுத்தார்.

"சொல்லுங்கோ வாத்தியார் என்னபிரச்சனை" என்றான் மோகன்

"கொள்ளி வைக்கிறதுக்கு ஆள் இல்லைத்தம்பி"

"அதுக்கேன் யோசிக்கிறியள், வேணுமெண்டா நானே வைக்கிறனே. அம்மாவுக்கு சாப்பாட்டை குடுத்திட்டு வந்திடுறன் நீங்கள் மற்றதுகளை கவனியுங்கோ" என்றான் மோகன்.

"டேய் தம்பி இங்கவாடா வாத்தியாரையும் ஒருக்கா கூப்பிடு" தாயின் குரல் அழைத்தது.

"என்ன வாத்தியார்? ஒரு பெரிய மனிசனாய் இருந்து கொண்டு எல்லா விபரமும் தெரிஞ்ச நீங்களே உவன் சொல்லுறதுக்கு ஓமெண்ணலாமோ? இவன்தானே தலைப் பிள்ளை. தகப்பனுக்கு கடமை செய்யாமல் இன்னொருத்தருக்கு செய்யலாமோ? மோட்டு வேலையெல்லே பார்க்கிறியள்!" அவள் தொடர்ந்து வெடித்தாள்.

"இல்லைப் பிள்ளை நான் வந்து..."வாத்தியார் குழைந்தார்,

"எண்டாலும் வாத்தியார் அது ஞாயமில்லைத்தானே. அது முறையில்லைத்தானே, அவன்ரை தேப்பன் எங்களோட இல்லாட்டாலும் உயிரோடைதானே இருக்கிறார். அவர் இருக்கேக்கை தலைப்பிள்ளை இன்னொருத்தருக்கு கடமை செய்யலாமோ? ஊருக்கு நியாயம் சொல்லுற உங்களுக்கு இது நாயமாய் தெரியுதோ?"

"அது சரி பிள்ளை இப்ப என்ன செய்யிறது. ஐயரும் வந்திட்டார். இப்ப எடுக்கவும் வேணும். வைச்சிருந்து தான் என்ன செய்யிறது. ஆர் வரப்போகினம். அந்த ஆள் கஷ்டப்பட்டு பெத்து வளர்த்து ஆளாக்கி விட்டதுகளில் ஒன்றுகூட தகப்பனுக்கு கடமை செய்யஇல்லை. சொத்துக்கள் கிடந்தென்ன ... பிள்ளையள் இருந்தென்ன, அநாதைப் பிணமாய்கிடக்கு'என்று கூறி பெருமூச்சை இழுத்துவிட்ட பரமசாமியர்.

"இந்த விசயத்தில் நீ கடுத்து வைச்சனி தான் பிள்ளை" என நிறுத்தினார்.

"சரி சரி இதுகளைப் பற்றி நாங்கள் ஆறுதலாய் கதைப்பம். இப்ப என்ன செய்யிறது. எனக்கெண்டா ஒண்டுமாய் விளங்கேல்லை."

"அப்ப நீங்களே வையுங்கோவன் வாத்தியார்" என்றான் மோகன்.

"சீச்சி...நான் கோயிலுக்காக விரதமெல்லே இருக்கிறன் தம்பி, நான் வைக்கேலுமெண்டா ஏன் இப்பிடிச் சுணங்கப் போறன், எப்பவோ அலுவலை முடிச்சிருப்பன்."

"அப்ப இப்ப என்ன செய்யிறது?"

(8ஆம் பக்கம் பார்க்க)

# கனடா துருக்கி தெரிவு செய்த உலகின் இரு பெண் பிரதமர்கள்

உலகின் பெண் பிரதமர்கள் வரிசையில் மேலும் இருவர் உருவாகியுள்ளனர். போலந்து, நோர்வே, நிக்கரகுவா, டொமினிகா, பங்களாதேஷ் என்பவற்றுடன் கனடா, துருக்கி என்பனவும் இணைந்து கொண்டுள்ளன. கனடிய பிரதமராக கிம் கெம்பெல்லும், துருக்கிய பிரதமராக டான்சு சில்லரும் தெரிவாகியுள்ளனர்.

அவ்ரில் பெட்ரா கெம்பல் என்பது அவர் பெயர். வான்கூவரின் நடுத்தர குடும்பம் ஒன்றில் பிறந்தவர். தந்தை வழக்கறிஞர். அவ்ரிலுக்கு 12 வயதாக இருக்கும் போது தாய் - தந்தையிடையே மணமுறிவு ஏற்பட்டுவிட்டது. தாய் இவர்களைவிட்டு விலகிச்செல்ல அவ்ரிலும் சகோதரியும் பாடசாலை விடுதியொன்றில் சேர்க்கப்பட்டனர். பாடசாலையின் கடும்கட்டுப்பாடுகள் அவ்ரிலுக்குப் பிடிக்கவில்லை.

அக்கால கட்டத்தில் தந்தை சுகவீனமுற்றதால் பாடசாலையை விட்டுவிலகி வீடுசென்றார். அப்பொழுது அவ்ரில் பெட்ரா தனது பெயரை கிம் என மாற்றிக் கொண்டார். இவரே இன்றைய கனேடிய பிரதமர் கிம் கெம்பலாவார். 1965இல் பிரிட்டிஷ் சர்வகலாசாலையில் அரசியல் துறைப் பட்டம்பெற்று பின்னர் லண்டன் பொருளாதார கல்வியில் பி.எச்.டிபட்டத்திற்காககல்வி கற்றுக்கொண்டிருந்தார். அப்பொழுது ரஷ்ய கணிதப் பேராசிரியராகிய நேதன்டிவின்ஸ்தியை மணம்புரிந்து கொண்டார். இதனால் கல்வி முற்றுப்பெறாது இடைநிறுத்தப்படவேண்டி ஏற்பட்டது.

கணவனுடன் ஏற்பட்ட மணமுறிவைத் தொடர்ந்து விக்டோரியாவில் மாநில ஆட்சித் தலைவருக்கு நிறைவேற்று அதிகாரமுள்ள செயலாளராகப் பொறுப்பேற்றார். 1986 இல் கிம் கன்சவேட்டிவ்சோஷியல் கிரெடிட் கட்சியின் தலைமையைக் கைப்பற்றும் முயற்சியில் இவருக்கு வெற்றி கிட்டவில்லை இவர் கருத்தடையை ஆதரித்த காரணத்தினால் கட்சியின் மேல்மட்டம் இவருக்கு எதிராக நின்றது.

1988இல் புரோக்ரசிவ் கன்சவேட்டிவ் கட்சியின் சார்பில் நாடாளுமன்றத்துக்கு போட்டியிடும் வாய்ப்பைப் பெற்ற கிம்கெம்பல் கடும் போட்டியின் மத்தியில் 269 வாக்குகளால் வெற்றி பெற்றார். இவர் தனது தேர்தல் பிரசாரத்தின் போது கனடா-அமெரிக்கா கட்டுப்பாடற்ற வர்த்தக உறவுத் திட்டத்தினை ஆதரித்துப் பேசியதுடன் இவ்விவகாரம் குறித்த முக்கிய பேச்சாளராக மாறிவிட்டார். இந்த வர்த்தக உறவுத்திட்டத்தின் காரணகர்த்தாக்கள் கனடாவின் அப்போதைய பிரதமர் மல்ரோனியும் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்சும் ஆவார்.

மல்ரோனிய அமைச்சரவையில் முதலில் பழங்குடி செவ்விந்திய மக்களின் நலன் காக்கும் அமைச்சராகவும் 11மாதங்களின்பின்னர்மிகமுக்கியத்துவம் வாய்ந்த சட்டத்துறை அமைச்சராகவும்கிம்கெம்பெல் பதவிவகித்தார். சட்டத்துறை கிம்கெம்பலுக்கு தேசிய அளவிலான அறிமுகத்தைக் கொடுத்தது.

குறிப்பாக துப்பாக்கி கட்டுப்பாடு, காதலர் பாலியல் வன்முறை, ஆண்கள் பாலியல் நடத்தைகள் மீதான இவரது வெறுப்பு போன்றவை அவை குறித்து இவர் வெளியிட்ட கருத்துக்கள் என்பன இவை ''தினசரி பேசப்படுபவர்'' என்ற நிலைக்கு மாற்றியது. ''நான் நாடாளுமன்றத்தில் நுழைந்து ஐந்து ஆண்டுகள் தான் மக்களுக்கு என்னைப் பிடிப்பதற்குக் காரணம் நான் அரசியல் வாதிகள்போல் பேசுவதில்லை'' என்கிறார்.

நவம்பரில் கிம்கெம்பல் பொதுத் தேர்தல் ஒன்றைச் சந்திக்கவிருக்கிறார். இத்தேர்தலில் இவர் வெற்றி பெறுவதைப்பொறுத்தேஇவரின்பதவி நீடிக்கப்படுமா? இல்லையா? என்பது தீர்மானிக்கப்படவுள்ளது. இவர் தற்காலிகப் பிரதமர்தான் என்பது எதிர்க்கட்சித் தலைவரான ஜீன் செர்டியனின் கருத்து. ஆனால் கனடா ஒரு தட்சரைப் பெற்றிருக்கிறது என்பது பலருடைய கணிப்பாக உள்ளது.

கனடாவிற்கு ஒரு கிம் கெம்பல்போல துருக்கிக்கு டான்சு சில்லர் எனும் பெண் பிரதமராகியுள்ளார். துருக்கியின் பெரும் பணக்காரரின் மகளாகிய இவர் 17 வயதில் மணம் முடித்ததும் தனது கணவரின் பெயரை மாற்றுவித்தார். இப்பொழுது அவரது கணவரின் பெயர் டான்சுவின் தந்தையின் குடும்பப் பெயராகும். இதன்மூலம் மணம் முடித்த பின்பும் தனது பெயரில் மாற்றம் ஏற்படாது பார்த்துக் கொண்டார்,

அமெரிக்காவில் கல்வி கற்ற இவர் ஒரு விரிவுரையாளராக இருந்தவர். அரசியலில் நுழைந்து 3 வருடங்களில் தனது 47-வது வயதில் துருக்கியின் பிரதமராகியுள்ளார். இவருக்கும், பெரும் வர்த்தகரான இவரது கணவருக்கும் 50 மில்லியன் டாலர் சொத்துக்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. பொருளாதார அமைச்சராக 20 மாதங்கள் மட்டும் கடமையாற்றிய இவருக்கு பிரதமர் பதவி கிட்டியுள்ளது.

பொருளாதாரத் துறை அமைச்சராக இவர் இருந்த போது இவர் மக்களுக்கு அளித்த வாக்குறுதி ''எனது காலத்தில் இரண்டு சாவிகள் ஒவ்வொரு குடும்பத்திற்கும் கிடைக்கச் செய்வேன்'' என்பதாகும். ஒன்று வீட்டுச்சாவி; மற்றையது கார்ச்சாவி. ஆனால் இவரால்பொருட்களின் விலைகளைக்கூட கட்டுப்படுத்தமுடியவில்லைஎன குற்றம்சாட்டப்படுகிறது.

மேலும் நட்டத்தில் இயங்கும் தொழில்துறைகளை தனியார் மயமாக்கும் திட்டத்தினை இவர் விரும்பியபோதிலும்பெருமளவுமுதலீட்டாளர்கள் இதில் ஈடுபட விரும்பவில்லை. காரணம் துருக்கிய அரசை எதிர்த்து துருக்கிய குர்திஷ் தீவிரவாதிகள் நடாத்தும் தாக்குதல்களும், மதவாதிகளின் கிளர்ச்சிகளும் ஆகும். இதேவேளை பொஸ்னிய அகதிகளை பராமரிக்கவும் துருக்கி பெருமளவு பணத்தைச் செலவிட்டுவருகிறது.

முன்னாள் துருகிப் பிரதமர் சுலைமான் டெமிரல்தான் டான்சு சில்லரை அரசியலுக்கு கொண்டுவந்தவர். பொருளாதாரத்தில் வீழ்ச்சியடைந்து சென்ற துருக்கிக்கு பொருளாதார அறிஞர் ஒருவரின் அவசியம்குறித்துஉணர்ந்துகொண்ட சுலைமான்டான்சு சில்லரை அரசியலுக்கு இழுத்து வந்ததாக கூறப்படுகிறது துருக்கியின் ஜனாதிபதி நக்கட் ஓசல் மரணமடைந்ததும் சுலைமான் ஜனாதிபதி பதவியை ஏற்றுக் கொண்டார். எனவே கட்சித் தலைமைப் பதவியும் பிரதமர் பதவியும் டான்சு சில்லருக்குக் கிடைத்தது.

டான்சு சில்லரின் கிரீடம் முட்களைக் கொண்டதுதான் உள்நாட்டு குர்திஷ் கிளர்ச்சி இஸ்லாமிய தீவிரவாதம், பொஸ்னியாவின் யுத்தம், அங்கோலா, சோவியத்தின் பிளவு என்பன துருக்கியைபாதித்துள்ளன என தெரிவிக்கப்படுகின்றது மேலும் துருக்கி கிழக்கையும மேறகையும் இணைத்து நிற்பதும் அதன் முக்கியத்துவத்தை அதிகரித்து நிற்கிறது.

துருக்கி ஆறுகோடி மக்களைக்கொண்ட ஒருநாடு. 1920 இலேயே பெண்களுக்கு வாக்குரிமைஉள்ளபோதும் 450உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றத்தில் 8 பேர்தான் பெண்கள் கடந்த ஆண்டுவரை பெண்கள் வேலையில் சேர்வதாகஇருந்தால்அவர்களதுகணவரின் அனுமதி பெற வண்டும் என்றுசட்டம் இருந்தது இவ்வளவுக்கும் மத்தியில பிரதமராகியுள்ள டான்சு சில்லருக்கு ஆதரவும்புகழும் அதிகரித்து வருவதாககருத்து கணிப்புகள் தெரிவிக்கின்றன.


## அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு

1. 9. 93இல் நடைபெற்ற அதிர்ஷ்ட லாபச்சீட்டிழுப்பில் பரிசில் பெற்றவர்கள் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| 1-ம் பரிசு இலக்கம் | 843 |
| 2-ம் ,, ,, | 2159 |
| 3-ம் ,, ,, | 4039 |

ஆறுதல் பரிசுகள்:

1) இல. 4079 2) இல. 1252

அதிர்ஷ்டசாலிகள் அத்தாட்சிப்படுத்தி உங்கள் பரிசுகளை நிலையச் செயலாளரிடம் பெற்றுக் கொள்ளுங்கள்.

யாழ். மா. ந. சனசமூக நிலைய சமாசத்தின் கீழ் இயங்கும் அனைத்து ச.ச. நிலையங்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகள்.

கலைமகள் சனசமூக நிலையம்.
நிர்வாகிகள்.

(5819)



## முக்கிய அறிவித்தல்

### O.D.O. & V.D.O.

### தொடர்பான அறிவித்தல்

அனைத்து ஒலிப்பதிவு, ஒளிப்பதிவு(O.D.O.& V.D.O)நாடாக்களை பதிவு செய்பவர்கள், வாடகைக்கு கொடுப்பவர்கள், பதிவு நாடாக்களை விற்பனை செய்பவர்கள் அனைவரிற்கும் அறியத்தருவது, இது வரை தமிழீழக் கலைஞர்களால் உருவாக்கப்பட்ட ஒலி, ஒளி நாடாக்களை (O.D.O.&V.D.O.)நீங்கள் இலகுவில் பெறக்கூடிய வகையில் யாழ்- பழைய பஸ் நிலையத்திற்கு அருகாமையில் உள்ள தமிழீழ வானொலித் தொடர்பகத்துடன் தொடர்பு கொண்டு தவறாது அனைவரும் எமது ஒலி, ஒளி நாடாக்களைப் பெற்றுக் கொள்ளலாம் என, ''நிதர்சனம்'' அறியத் தருகின்றது.

குறிப்பு:-

தமிழீழத்தில் நடைபெறும் அனைத்து முக்கிய சம்பவங்களையும், பிறநாட்டுச் சம்பவங்களையும் தொகுத்து மாதம்தோறும் எம்மால் வெளியிடப்படும், ''ஒளிவீச்சு'' V.D.O சஞ்சிகையில் இம் மாதம் விடுதலைப் புலிகளால் ''இதயபூமி 1'' எனப் பெயரிடப்பட்டு நடாத்தப்பட்ட ''மண்கிண்டிமலை இராணுவமுகாம் தகர்ப்பு'', ''பொலனறுவையில் நடாத்தப்பட்ட இரு தாக்குதல்கள்'' என்பவற்றை களத்தில் நின்று நேரடியாகப் பிடிக்கப்பட்ட படங்களையும் தாங்கி வருகிறது, என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அனைவரினதும் ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கிறோம்.

''நிதர்சனம்'' நிறுவனம்

தொடர்பு:
தமிழீழ வானொலி தொடர்பகம்.
யாழ். பழைய பஸ்நிலையம்,
யாழ்ப்பாணம்.

(சி-7334)



வாடிக்கையாளர்களே !

## இதோ ஓர் நற்செய்தி

## இன்று முதல் மாதாந்த பரிசுத் திட்டம்

ரூபா ஐநூறு பெறுமதிக்கு மேல் ஒரே தடவையில் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களிற்கு வழங்கப்படும் பரிசுச் சிட்டைகளின் மாதாந்த சீட்டிழுப்பில மூன்று பரிசுகள் வழங்கப்படும்.

**1-ம் பரிசு ரூ. 2500/-** பெறுமதியான பொருள்கள்
**2-ம் பரிசு ரூ. 1500/-** பெறுமதியான பொருள்கள்
**3-ம் பரிசு ரூ. 1000/-** பெறுமதியான பொருள்கள்

பொருள்கள் பரிசு பெறும் வாடிக்கையாளர் தெரிவுசெய்யலாம்.

எப்பொருள் வேண்டினும் அப்பொருள் வேண்டிட

# எழிலகம்

(பகுதி கடை தொகுப்பு)
(Departmental Store)

**மணிக்கூட்டு வீதி — யாழ்ப்பாணம்**

எழிலகத்திலும், சார்ந்த நிறுவனங்களிலும் சேவையாற்றும் ஊழியர்களும் குடும்பத்தினரும் இத்திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்கள்.

(7326)

# கல்வியில் சாதனை படைக்கும் கல்வி வளர்ச்சிக் கழகங்கள்

"—தமிழ் மக்களில் அதிகமானோர் கல்வி அறிவு உடையவர்கள். படித்துப் பட்டம் பெற்று உலா வருதலே சிறப்பு என்று புருவத்தை உயர்த்திப் போலியான பெருமை பேசுபவர்கள் ஒருபுறம். அதேவேளை அடிப்படைக் கல்வி தானும் மறுக்கப்பட்டு. புத்தகம் சுமக்க வேண்டிய வயதில் குடும்பச் சிலுவையைச் சுமக்கும் சிறார்கள் ஒருபுறம் வாழக் கற்க விருப்பமிருந்தும் சூழ்நிலையின் நிர்ப்பந்தத்தினாலும், கொடுமையினாலும் உதிர்ந்து போகும் சின்னஞ்சிறு மொட்டுகளின் வளர்ச்சிக்கு வித்திட வேண்டும் என்ற எமது தேசியத் தலைவரின் இலட்சிய விருப்பில் உருவானவைதான் கல்வி வளர்ச்சி கழகங்கள்."

இவ்வாறு உணர்ச்சிபூர்வமாகக் கூறினார் தமிழீழ மாணவரமைப்புப் பொறுப்பாளர் ந. இன்பன்.

இன்றைய வரலாற்று நிர்ப்பந்தச் சூழ்நிலையில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களை சேர்ந்த சிறார்கள் மற்றும் பொருளாதார வகையில் பின்தங்கிய கிராமங்களில் வாழும் சிறார்களின் கல்வி வளர்ச்சியில் ஒரு மௌனப புரட்சியை ஏற்படுத்தி வரும் கல்வி வளர்ச்சிக் கழகங்களின் செயற்பாடு, நோக்கம் பற்றி இன்பனிடம் கேட்டபோது,

—குடும்ப வசதியீனம் மற்றும் கல்வி அறிவைப் பெறுவதற்கான வாய்ப்புகள் மறுக்கப்பட்டவர்கள் சிறுவயதிலேயே தொழிலுக்குச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாக்கப்படுகிறார்கள். இவர்களுக்கு உயர் கல்வியை வழங்குவதற்கான வாய்ப்பும், சந்தர்ப்ப சூழ்நிலையும் இல்லாவிடினும் குறைந்தபட்சம் அடிப்படைக் கல்வியையேனும் வழங்கும் நோக்கத்துடன் கல்வி வளர்ச்சிக் கழகங்கள் பல இடங்களில் செயற்படுகின்றன என்றார்.

இதனைத் தொடர்ந்து அவர் பின்வருமாறு கூறினார்:

—தமிழீழத்தின் பின்தங்கிய பகுதிகளை மையமாக வைத்து ஆரம்பிக்கப்பட்ட கல்வி வளர்ச்சிக் கழகங்கள் பல இரண்டு வருட நிறைவை எய்தியுள்ளன. மற்றும் சிலஓராண்டு காலத்தையும் கடந்து சேவையாற்றி வருகின்றன. ஆரம்பத்தில் நாம பல இடர்ப்பாடுகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய ஒரு சூழ்நிலை. முதலில் பெற்றோர்கள் சிறிது தயக்கம் காட்டினார்கள். பெற்றோர்களை அவர்களின் இல்லம்தோறும் தேடிச் சென்று அவர் தம் பிள்ளைகளின் இன்றைய நிலை, அவர்களுக்குக் கல்வி அறிவு புகட்ட வேண்டிய தேவை பற்றும் அத்தியாவசியம் பற்றி விளக்க வேண்டியிருந்தது. முதல் நாள் பிள்ளைகள் கல்விக் கழகங்களுக்கு வருவார்கள். அடுத்த நாள் வரவு இருக்காது. தொழில் தேடிச் சென்று விடுவார்கள். பல கஷ்டங்கள் மத்தியிலும் எமது மாணவர் அமைப்பு உறுப்பினர்கள் வீடு வீடாகச் சென்று மாணவர்களை அழைத்து வரவேண்டிய நிலையும் இருந்தது ஆரம்பத்தில் கொஞ்சம் நெகிழ்ச்சியாகச் செயலாற்றினோம். முதல் இரண்டு நாள்கள் வரவில்லை என்றால் பரவாயில்லை என்று பார்த்திருந்தோம் தொடர்ந்தாற்போல் மூன்றாம் நாளும் வராதவர்கள் மேல் சற்றுக்கண்டிப்பாயிருந்தோம். கல்வி வளர்ச்சிக் கழகப் பொறுப்பாளர்கள் சைக்கிளில் மாணவர்களின் வீட்டு வாசலில் நிற்பார்கள்.


## பேட்டி: சி.ரகுராம்

— உதாரணமாக. சில கிராமங்களில் முந்நூறு பேர் வரை இருப்பார்கள். அப்படியிருந்தும், அவர்கள் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாக ஐம்பது பேர் வரை இருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இப்படியான கிராமங்களில் கல்வி கேள்வியின் அவசியத்தை வலியுறுத்த நாம் பல நாட்கள் போராட வேண்டியிருந்தது. இறுதியில் எமது நோக்கம் வென்றது. கூட்டங்கள் என்றால் நாம் எதிர்பார்ப்பதற்கும் அதிகமாக வருகை தருகிறார்கள். பிள்ளைகளின் கல்வியிலும், கல்வியோடு இணைந்த செயல்களிலும் அக்கறை காட்டுகிறார்கள். பிள்ளைகள் பங்கு பற்றும் நிகழ்வுகளுக்கு பெற்றோர்களின் ஒத்திசைவு தாராளமாகக் கிடைக்கின்றது.

கல்வி வளர்ச்சிக் கழகங்களில் ஆசிரியர்களின் பங்களிப்புப் பற்றிக் கேட்டபோது-

— ஆசிரியத்துவத்தின் மகத்துவத்தை இந்த ஆசிரியர்களில் காணக்கூடியதாக உள்ளது எவ்வித ஊதியத்தையும் எதிர்பாராமல், சேவை உணர்வோடு கல்விக் கழகங்களில் கற்பித்தல் தொழிலில் ஈடுபட்டு வரும் ஆசிரியர்களின் தன்னலமற்ற சேவையை நிச்சயம் பாராட்டாமல் இருக்க முடியாது அவர்களது சேவை மேலதிகமாகக் கிடைக்கப் பெறுமாயின் கல்வி வளர்ச்சிக் கழகங்களின் சேவை மேலும் பயன் பொருத்தமாக அமையும் என்பது எமது நம்பிக்கை. தவிர பாடசாலை அதிபர்கள், கொத்தணி அதிபர்களினதும் ஒத்துழைப்புக்குக் குறைவில்லை.

மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொரு தவணைகளிலும் வைக்கும் பரீட்சைகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் பரிசுகள் வழங்குவதிலும் கரிசனையாக உள்ளோம் என்றார்.



அவர் தொடர்ந்து

யாழ்ப்பாண மாவட்டத்தில் மாத்திரம் மொத்தம் பத்தாயிரம் மாணவர்கள் வரை கல்வி பயிலும் முப்பத்தெட்டு கல்வி வளர்ச்சிக் கழகங்கள் இயங்குகின்றன. கிளிநொச்சி மாவட்டத்தில் ஆறு கல்வி வளர்ச்சிக் கழகங்களும், வன்னி மாவட்டத்தில் ஐந்து கல்விவளர்ச்சிக்கழகங்களும் மன்னாரில்விடுதிவசதிகளுடன் கூடிய இரண்டு கல்வி வளர்ச்சிக் கழகங்களும் அப்பகுதிகளில் பாரிய கல்விப பணியாற்றி வருகின்றன. இதை விட இடம் பெயர்ந்தோர் முகாம்களில் வாழும் ஏழைச் சிறார்களையும்அரவணைத்துக் கல்விவளர்ச்சிக் கழகங்களில் படிப்படியாக இணைத்து வருகின்றோம் மேலும் கண்டிக்குளியில், தமிழீழத்தில் பல பகுதிகளிலும் பெற்றோரை இழந்த ஏழைச் சிறார்களுக்கு உதவும் வகையில் மேஜர் பாரதி மாணவர் இல்லம் ஒன்றையும் நிறுவியுள்ளோம். இந்த அறுபது ஏழைச் சிறுமிகள் விடுதியில் தங்கிக் கல்வி பயின்று வருகிறார்கள். இதே போன்று, ஆதரவற்ற ஏழை மாணவர்களுக்கான வசதிகளையும் ஏற்படுத்தும் பணியில் மாணவர் அமைப்பு ஈடுபட்டு வருகிறது என்று குறிப்பிட்டு விட்டு, கல்வி வளர்ச்சிக் கழகங்களின் நிர்வாக ரீதியான செயற்பாடுகள் பற்றிக் கூறினார்,

—பாடசாலை நேரம் முடிந்தவுடன் மாலை நேரங்களில் கல்வி வளர்ச்சிக் கழகம் தனது சேவையை ஆரம்பிக்கிறது. யாழ் மாவட்டத்தைப் பொறுத்தவரை ஆண்டு ஒன்று தொடக்கம் ஆண்டு பதினொன்று வரையுள்ள மாணவர்களுக்கு வகுப்புகளை நடாத்துகிறோம். வட தமிழீழத்தின் பிற மாவட்டங்களைப் பொறுத்த வரையில் மேற்படி ஆண்டுகளுடன் உயர்தர மாணவர்களுக்கான வகுப்புகளையும் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் தகுதியானவர்களின் சேவையைப் பெற்று நடாத்துகின்றோம் யாழ். மாவட்டத்திலும் பின்தங்கிய பகுதிகளிலும் உயர்தர மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் சேவை, உதவி செய்யும் எண்ணமும் எமக்குண்டு. விசேடமாக.மணவர்களின் ஏனைய திறமைகளை வெளிக் கொண்டு வரும் முகமாக கலைநிகழ்வுகளையும் அடிக்கடி நடாத்தி வருகின்றோம். இதனால் மாணவர்களுக்கு பூரணமான கற்பித்தலையும் கற்றலையும் ஏற்படுத்தமுடிவதுடன் கல்விபற்றிய விழிப்புணர்வையும் கொண்டுவர முடிகிறது எனத் தெரிவித்தார்.

### "அனைவருக்கும் கற்கும் உரிமை உண்டு"

என்று அனைத்துலக மனித உரிமைகள் சாசனம் பிரகடனப் படுத்துகின்றது. இந்த உரிமை மறுக்கப்பட்டுக் கல்விக்காக முழங்காலிட்டு நிற்கும் ஏழைச் சிறார்களின் கல்வி வளர்ச்சிக்குச் செய்ய வேண்டிய காரியங்களுடன் திட்டங்களையும் வகுத்துக் கல்விக் கழகங்கள் செயற்பட்டு வருகின்றன. கொள்கை மீதான பற்று, காரியங்கள் மூலமாக செயற்படும் போதுதான் அர்த்தம் பெறுகின்றது.

## மாரடைப்பு

க்க வேண்டும்.

(1) உளரீதியானது: இதற்காகச் செய்யப்படுகின்ற ஒன்று நீங்கள் விரும்புகின்ற ஒன்றாகவும், இலகுவானதாகவும் இருக்க வேண்டும் இங்கு 'செஸ்' போன்ற விளையாட்டுக்களை உதாரணமாகக் கொள்ளலாம்.

(2) உடல் ரீதியானது: இது வாழ்க்கையின் ஒரு பகுதியாகவும், ஓய்வு நேரத்தில் செய்வதாகவும் இருக்க வேண்டும். நீந்துதல். யோகிங், சைக்கிள் ஓடுதல். விரைவாக நடத்தல் போன்றவையே போதுமானது செய்யும் பயிற்சி எதுவாக இருந்தாலும் ஒழுங்காகவும் ஓர் குறித்த எலலையுடனும் இருக்க வேண்டும். நளுக்கு பதினைந்து நிமிடங்கள் செய்தால் போதுமானது. யோகாசனங்கள் மற்றும் சாந்தி ஆசனங்கள் பயிற்சி முறைகளையும் விரும்பினால் கடைப்பிடிக்கலாம். இவை உள உடல் ரீதியான ஆறுதல்களைத்தரும்.

(5) பதற்றம், கவலை, ஏமாற்றம் குறற மனப்பான்மை, பயம் என்பன மாரடைப்பு நிகழ்வதை துரிதப்படுத்துகின்றன என்பதில் இருவேறுகருத்துகளுக்கு இடமிருக்க முடியாது. எனவே மேற்கூறப்பட்டவற்றை இயலுமானளவு தவிர்த்து மனக்கிளர்ச்சிகளிற்கும் மனப்போராட்டங்களிற்கும்இடம்கொடுக்காதுநிம்மதியான, நிதானமான, அமைதியான வாழ்க்கையை வாழப் பழகிக்கொள்ள வேண்டும்.

(6) அதிக மதுமானம் மற்றும் கருத்தடை மாத்திரைகளின் பிரயோகத்தை தவிர்த்தல்

(7) அதிக மதுபாவனையானது உயர்குருதி அமுக்கத்துடனும் அதிக எடையுடனும் நெருங்கிய தொடர்புடையது. இவையிரண்டும் மாரடைப்புடன் நெருங்கியதொடர்புடையவை இதுமட்டுமன்றி குடிப் பழக்கத்தால் உடல். உள, சமூக பொருளாதார பிரச்சினைகள் தோன்றுகின்றன. கருத்தடை மாத்திரைகளை குடும்ப வைத்தியரின் ஆலோசனைகளுக்கமைய பாவிப்பது நல்லது.

(8) இருதய வியாதியுள்ள ஒரு பெண் கர்ப்பமடைந்தால் மிகவும் கவனமாகப் பேணப்படவேண்டும் குறிப்பாக கர்ப்பத்தினிறுதி நாட்களில்மிகவும் உன்னிப்பகஇருக்கவேண்டும். உங்கள்முன்னிலையில்உங்கள் குடும்பத்தவருக்கோ அல்லது யாருக்கோ மாரடைப்பு வந்து விட்டதாக வைத்துக்கொள்வோம் நீங்கள் உடனடியாக என்னசெய்வீர்கள்? இவற்றை பற்றி சிறிது ஆராய்வோம்.

மிதமான வியர்வையுடன்திடீரென நெஞ்சில் கடும் நோவுதால் குறிப்பாக நடுத்தர வயதுடைவராக இருந்தால் இதை முதலில் மாரடைப்பு என்றே கொள்ள வேண்டும். இந்நோ உட்புற இடது கையிலும் காணப்படும். மார்பெலும்பிற்கு பின்னால் யாரோ நெரிப்பது போன்ற வலி ஏற்படும். இதுசில இரைப்பை கோளாறுகளா ஏற்பட்ட ஒன்றாகவும் இருக்கக்கூடும். இதை வைத்தியரே முடிவு செய்யவேண்டும். எனவே நெஞ்சு வலி என்று தெரிந்தவுடன் மாரடைப்பு ஆகக் கருதி பின்வருவனவற்றை உடனடியாக செய்யவேண்டும்

(i) வைத்திய சாலைக்கு கொண்டுசெல்வதற்கான ஏற்பாடுகளை உடனடியாக செய்தல் [ii] நோயாளியின் இருக்கை நிலையை இலகுவாக்கல் மேலதிகமாக தலையணையை முதுகுப்புறமும் தோளின் பின்புறமும் வைத்தல் (iii) கழுத்தை, நெஞ்சைச் சுற்றியுள்ள இறுக்கமான ஆடைகளை அகற்றிவிடல் (iii) நோயாளியை மிக சமாதானமாகவும் அமைதியாகவும் இருக்கச் செய்தல் (iv) நோயாளிக்கு தேவையான எல்லாம் செய்யப்பட்டிருக்கின்றதென்றும் விரைவில நெஞ்சு வலியை குறைக்க முடியுமென்றும் எல்லாவிசயங்களும் கட்டுப் பாட்டில் இருப்பதாகவும் அறிவுரை வழங்கல்.

(v) யன்னல்களை ஓரளவு திறந்து விடுதல். போதியளவு காற்றோட்டம் தேவை சில என்றகாற்று தவிர்க்கப்பட வேண்டும் (vi) நீங்கள் அமைதியாகவும் சமாதானமாகவும் இருப்பதுடன் நோயாளியுடன் உரத்து கதைப்பதை தவிர்க்கவும்.


யாழ். பல்கலைக்கழக

**வெளிவாரி விரிவுரைகள்**

கலைமாணிபகுதி I B. A PART I

வணிகமாணிபகுதி I B. Com PART I

**விரிவுரைகள் 5-9-93 இல் ஆரம்பமாகின்றன**

குறிப்பு:- பாடத்திட்டம் குறித்தகாலப்பகுதியில் முடிக்கப்பட வேண்டியிருப்பதால் பரீட்சை முடிவு வரும்வரை காத்திராமல் விரிவுரைகளுக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

உதவிப்பதிவாளர்

பட்டப்படிப்புகள் கல்லூரி

148/1 ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

(சி-7343)

# மாரடைப்பு நோய் -ஓர் ஆய்வுக் கண்ணோட்டம்

இருதயமானது மனிதனின் தொழிற்பாட்டு அங்கங்களில் மிகமுக்கியமானதும் இன்றியமையாததும் ஆகும். இது ஒய்வு நிலையில் நிமிடத்திற்கு உடலிலுள்ள குருதியில் 5—6 லீற்றர் குருதியை உடல் முழுவதும்பாய்ச்சுகின்றது எழுபது வயதுவரை வாழ்கின்ற ஒருவர் தன்வாழ்நாளில்மூன்று மில்லியன் பரல் இரத்தத்தை உடல்முழுவதும் பாய்ச்சுவார். இதிலிருந்துஇருதயம் செய்யும் வேலையின் அளவையும், இதற்கு போசணைப் பொருள்களினதும் (குளுக்கோஸ்) ஒட்சிசனதும் இன்றியமையாமையும் நாங்கள் அறிந்து கொள்ளலாம்.

## மாரடைப்பு என்பது என்ன?

குருதியிலுள்ள கொலஸ்ரோல் மற்றும் சில கொழுப்பு பொருள்கள் குருதிக் குழாய்களின் உட்புறமாகபடிந்து கொள்கின்றன. இது புதிதான ஒன்றுமல்ல. நிகழாத ஒன்றுமல்ல. சிறு வயதிலிருந்தே இது ஆரம்பித்து விடுகின்றது. இதனால் இரத்தக் குழாய்களின் சுவர்கள் கடினமடைந்து விரிந்து சுருங்கும் தன்மையை இழக்கின்றது.

இவ்வாறான படிவுகள் குருதி ஓட்டத்தை காலப்போக்கில் பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ தடைசெய்யலாம் பகுதியாக தடைசெய்யப்படும்போது இரத்தஓட்டம் மெதுவாக்கப்படுவதால் மேலும் படிவடைதல் தூண்டப்படுகின்றது.

இந்த தடைப்படுதலானது எல்லா இரத்தக் குழாய்களிலும் நிகழ்கின்றது. ஆனால் உடலில் தொழிற்பாட்டு ரீதியாக முதலில் முக்கியத்துவம்வாய்ந்தது மூளை. அடுத்தது இருதயம் இரண்டிற்குமான குருதி விநியோகமானது இன்றியமையாததும், தவிர்க்க முடியாததும் கூட.

இந்த தடைப்படுதல்மூளையிலுள்ள இரத்தக் குழாய்களில் ஏற்பட்டால் பாரிச வாதம் உண்டாகின்றது. இருதய தசைகளின் தொழிற்பாட்டுக்கு வேண்டிய குருதியை வழங்கும் முடியுரு நாடிகளில் ஏற்பட்டால் மாரடைப்பு நோய் உண்டாகின்றது. அதாவது குருதி விநியோகம் தடைப்படுவதால் இதயத் தசைகளின் இயக்கத்திற்கு தேவையான ஒட்சிசன், குளுக்கோஸ் என்பன இல்லாமல் போகின்றன. இதனால் அப்பகுதி இழையங்கள் இறக்கின்றன. இது தொடர்ந்து நிகழ இருதயம் வேலை செய்யும் ஆற்றலை இழக்கின்றது. இருதயம் ஆற்றலை இழக்க மனிதன் தன்னை இழக்கின்றான்.

இந்த தடைப்படுதலை எங்களுடைய வீட்டுநீர்க்குழாய்களில் சுண்ணாம்பு படிவதுடன் ஒப்பீட்டு விளங்கிக் கொள்ள முடியும். படிதல் அதிகமாவதுடன் நீர்க்குழாய்களிலிருந்து வெளிவருவது நாளடைவில் குறைந்து கொண்டே செல்கின்றது. நாங்கள் இதை கவனிக்காது விட்டால் இறுதியில் நீர் வருதலே நின்றுவிடுகின்றது.

நம்மக்களிடம் ஒரு பிழையான கருத்து நிலவி வருகின்றது. மாரடைப்பு மூன்றாவது முறை வந்தால் இறப்பு நிச்சயம் நிகழும் என்பது. இது எப்பொழுதும் உண்மை

வீ. பாலகிருஸ்ணன்
மருத்துவ பீடம் - யாழ்ப்பாணம்.

யாக இருக்க வேண்டுமென்பதில்லை. அமெரிக்காவின் முன்னாள் அதிபர் 'ஐசன்கோவர்' ஐந்தாவது முறை மாரடைப்பு வந்தும் பூரண குணத்துடனிருந்தார். முரண்பாடாக முதலாம் முறை வருபவர்களே உடனடியாக இறந்து விடுவதுண்டு.

## மாரடைப்பு நோய் ஏன் ஏற்படுகின்றது?

இதற்கு பல காரணங்களுண்டு. இவற்றில் ஆகக்குறைந்தது மூன்றையாவது மாரடைப்பு நோயாளி கொண்டிருப்பார்.

### 1: குருதியிலுள்ள கொலஸ்திரோலினளவு

170-200mg/dl குருதியில் இதனளவு கூடவாக இருந்தால் (250mg ஐ விட கூட) மாரடைப்பு நிகழ்வதற்கான ஏது நிலைகள் கூட என்பதில் இருவேறு கருத்துக்களிற்கு இடமிருக்க முடியாது. அதற்காக மாரடைப்பு நோயுள்ளவர்களிலெல்லாம் கொலஸ்திரோலினளவு கூட இருக்க வேண்டுமென்பதில்லை. அதே போல கொலஸ்திரோலளவு கூட இருப்பவர்களிற்கெல்லாம் மாரடைப்பு வரவேண்டுமென்பதுமில்லை.

### 2) உயர் குருதியமுக்கம்

இருதயம் இதனால் அதிக வேலை செய்ய வேண்டியிருக்கின்றது. குருதியமுக்க அதிகரிப்புடன் மாரடைப்பு நிகழ்வதற்கான சாத்தியக் கூறுகள் அதிகரிக்கின்றன. மனிதனின் சாதாரண குருதியமுக்கம் '120/80'mmg என குறிக்கப் படுகின்றது. இதில் '120' என்பது இருதயம் சுருங்கும் போது இரத்தக் குழாய்களிலுள்ள குருதியின் அமுக்கம் (Systolic Blood Pressure) '80' என்பது இதயம் விரியும் பொழுது இரத்தக்குழாய்களிலுள்ள குருதியின் அமுக்கம் (Diastolic Blood Pressure) இதில் பின்னயதே மாரடைப்புடன் நெருக்கமான தொடர்பை உடையது ஏனெனில் இதன் போது தான் இருதய தசைகளிற்கான குருதி முடியுரு நாடிகளினூடாகவழங்கப் படுகின்றது. எனவே அமுக்க அதிகரிப்பின் பொழுது குருதி வழங்கலில் சிரமம் ஏற்படுகின்றது.

### (3) புகைபிடித்தல்

புகை பிடிபவர்களை ஒரு அறிஞர் கண்டிக்கும்போது சிகரெட்டின் ஒரு முனையில் நெருப்பும் மறுமுனையில் ஒரு மூடனின் வாயும் இருப்பதாக குறிப்பிடுகின்றார். புகை பிடிக்காதவர்களைவிட நாளொன்றுக்கு இருபது சிகரெட்டிற்கு மேல் புகைபிடிக்கும் ஒருவர் இளம் வயதிலேயே மாரடைப்பினால் திடீர் மரணத்திற்காக தன்னை 5 மடங்கு அதிகமாக்கிக் கொள்கின்றார்.

புகையிலையிலுள்ள நிக்கொட்டின், காபனோர்ஒட்சைட் மற்றும் சில நச்சுப்பொருள்கள் கொழுப்பு பதார்த்தங்கள் படிவதை அதிகரிப்பது மட்டுமல்லாமல் இதயத் துடிப்பை அதிகரிக்கவும் செய்கின்றன. மேலும் இவைகுருதிக் குழாய்களை சுருங்கச் செய்து குருதி செல்லும் அளவை குறைக்கின்றன.

### (4) மீதமான நிறை/ அதிக எடை

பொதுவாக மனிதனுக்கு அனுமதிக்கப்பட்ட நிறை 64.5kg அதிக எடை மனிதனுக்கு எல்லாவகையிலும் தீமையானது. ஒருவகையிலும் நன்மை கிடையாது 'நீங்கள்எந்தகடையில் அரிசி வாங்குகிறீர்கள்' என்ற மற்றவர்களின் நகைப்பு வேறு. இவ்வகையில் ஒல்லியாக மெலிந்திருப்பது எவ்வளவோ மேல். அதிக எடை மாரடைப்பால் திடீரென நிகழும் மரணத்துடன் மிகவும் நெருங்கிய தொடர்புடையது.

### [5] குருதியில் அதிகளவு குளுக்கோஸ்[சலரோகம்]

சலரோகமுள்ள நோயாளிகளிற்கு மாரடைப்பு அதிகம் உண்டாகின்றது.

### [6] பரம்பரைக்குரியது

பெற்றோர்களில் யாராவது ஒருவருக்கு இருந்தால் பிள்ளைகளிற்கு வர ஏது நிலையுண்டு. ஆனால் நிச்சயம் பிள்ளைகளிற்கு கட்டாயம் வர வேண்டுமென்பதில்லை.

### (7) பதற்றமாகவும் சில அவசர நெருக்கடிகளிலும் உட்பட்டிருத்தல்

இவை தற்போதைய போர் சூழ்நிலைகளில் சாதாரணமாக நமமக்கள் அனுபவிப்பவை. அதிர்ச்சி ஊட்டும் செய்திகளோ, கோபமூட்டும் செய்கைகளோ சில சந்தர்ப்பங்களில் மாரடைப்பை கொண்டு வந்து விடுகின்றது

### (8) மிகக்குறைவான உடற்பயிற்சி

ஓரிடத்தில் இருந்தபடியே அதிக உடல் அசைவுகளின்றி 'மென்மை' யான வேலைகளைச் செய்யும் டாக்டர்கள், கணக்காளர்கள், ஆசிரியர்கள் போன்றோர்களிற்கு கடுமையான வேலை செய்கின்றவர்களை விட மாரடைப்பு அதிகம் ஏற்பட வாய்ப்புண்டு.

### (9) பால் (Sex) வேறுபாடு

பெண்களைவிட ஆண்களுக்கு மாரடைப்பு நோய் வருவதற்கான ஏது நிலைகள் பத்து மடங்கு அதிகமானவை. பெண்களிலுள்ள சில பாலியல் ஓமோன்கள் (Sex Homones) படிவுறுவதிலிருந்து கொழுப்புக்களை தடுப்பதன் மூலம் இதற்கு காரணமாக அமைகின்றன.

### (10) உணவுவகைகள்

நிரம்பிய விலங்கு கொழுப்புக்கள், தேங்காய்நெய் போன்றவற்றின்மிகையான பாவனை மற்றும் கோப்பி அருந்துதல்

### (11) வயது

மாரடைப்பு நடுத்தர வயதிலோ, பின்போ ஏற்பட்டாலும் இக்கொழுப்பு பதார்த்தங்கள் படியும் செயல்முறை சிறுபராயத்திலேயே தொடங்கி விடுகின்றது.

## மாரடைப்பு நோய் வருவதை எவ்வாறு தடுப்பது?

எங்குதான் முள் இல்லை? காட்டிலும் முள்ளுண்டு. ரோட்டிலும் முள்ளுண்டு. பார்த்து நடப்பவன் காட்டில் கூட நடக்கலாம் பார்க்காமல் நடப்பவன்ரோட்டில்கூடநடப்பது சிரமம்.

அதேபோல மாரடைப்பு முதல் முறை நிகழ்வதையோ அல்லது மேலும் மீண்டுமொரு முறை நிகழ்வதையோ நிச்சயமாக தடுக்க முடியும். அல்லது குறைக்க முடியும். இதற்காக வாழ்க்கை முறையை முக்கியமாக உணவு விசயத்தில் நாம் எவ்வாறு எம்மை மாற்றிக் கொண்டு எங்களுக்கு நாமே சில கட்டுப்பாடுகள் விதித்து, எவ்வாறு அவற்றைநிறைவேற்றிக்கொள்கின்றோமஎன்பதில தான் எல்லா வெற்றியும்தங்கியிருக்கின்றது. ஒழுங்காகவும் திட்டமிட்ட முறையிலும் உள, உடல், ஆன்மீக ரீதியாகவும் இவற்றை கைக்கொள்ளுமிடத்து மாரடைப்பு நோயானது உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் ஒன்று என்பதற்கு பதிலாக நீண்டகாலம் உயிருடன் வாழவைக்கும் ஒன்றாகவும் மாறலாம். இந்நோய் நிகழ்வதை குறைப்பதற்கான சில ஆலோசனைகளை இங்கு கவனிப்போம்:

### 1. உள்ளெடுக்கும் உணவு வகை

எமது உணவில் 20 வீதமான கொழுப்பு இருந்தால் போதுமானது. ஆனால் எங்களில் பலர் இரண்டு மடங்கை விட அதிகமாகஉட்கொள்கின்றோம் அது மட்டுமல்லாமல் கொலஸ்ரோலை அதிகமாகக் கொண்ட பிழையான வகைக் கொழுப்புணவுகளை உட்கொள்கின்றோம். முக்கியமாக முட்டை மஞ்சள் கருவில் கொலஸ்திரோல்அதிகமுண்டு. இவ்விடத்தில் கொழுப்பைப் பற்றி சிறிது கவனிக்க வேண்டும். கொழுப்பில் இரண்டு வகையுண்டு.

#### 1) நிரம்பியகொழுப்புக்கள்

மீன் கொழுப்பைத் தவிர அனைத்து கொழுப்புகளும் இதிலடங்கும். உதாரணமாக நெய், வெண்ணெய், இறைச்சிக் கொழுப்பு, முழு ஆடைப் பால், முட்டை என்பவற்றை கொள்ளலாம். தாவரக் கொழுப்பில் முக்கியமானது தேங்காய் எண்ணெய் ஆகும்.

நிரம்பிய கொழுப்புக்கள் குருதியிலுள்ள கொலஸ்திரோலினளவை அதிகரிக்க செய்கின்றன.

#### 2) நிரம்பாத கொழுப்புக்கள்

இவற்றில் பிரதானமாக தாவர கொழுப்புகளான சோயா, அவரை, எள், சோளம், சூரிய காந்தி போன்றவற்றின் எண்ணெய்களைக் கொள்ளலாம். இவை குருதியிலுள்ள குளுக்கோஸ் இன் அளவைக் குறையச் செய்கின்றன.

எனவே நாம் உட்கொள்ளும் உணவு கொலஸ்ரோலையும் நிரம்பிய கொழுப்பையும் குறைவாகக் கொண்டதும், நிரம்பாத கொழுப்பை அதிகமாக கொண்டதுமாக இருக்கவேண்டும்.

நார்வகை உணவு பொருட்களான பழவகை, காய்கறி, தானியங்கள் போன்றவற்றை அதிகமாக உட்கொள்ள வேண்டும். இவை குருதியிலுள்ள கொலஸ்திரோலினளவை குறைப்பதாகக் கருதப்படுகின்றது.

சோளம், ஒலிவ், சூரிய காந்தி, அவரை எள் போன்றவற்றின் எண்ணெய்களின் பிரயோகத்தை கூட்டவேண்டும். முட்டையின் பிரயோகத்தையும்குறைக்கவேண்டும். விரும்பினால் வெள்ளைக் கருவை ஓரளவு பயன்படுத்தலாம்.

இதிலிருந்து தாவரவகையிலமைந்த உணவேமாரடைப்பு நோய் வராமல் தடுக்கவும், வந்தபின் குறைக்கவும் சிறந்ததக கொள்ளப் படுகின்றது. இதனால்தானோ என்னவோ மாமிசம் சாப்பிடாதவர்கள் பரம்பரையில் மாரடைப்பால் இறப்பவர்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கக் காணப்படுகின்றது.

சீனி மற்றும் கறியுப்பின் பயன்படுத்தலையும் குறைப்பது நல்லது.

### 2) உயர் குருதி அமுக்கம் அல்லது சலரோகம்

என்பன ஒருவருக்கு இருந்தால் அல்லது அவரது பரம்பரையில் இருந்தால் முன்னெச்சரிக்கையான நடவடிக்கைகளை ஒழுங்காக கடைப்பிடிப்பதுடன் வைத்தியரின் ஆலோசனைக்கு அமைவாகவும், பணிவாகவும் நடக்க வேண்டும்.

### 3) புகைபிடித்தலை நிறுத்தல்

குறிப்பாக வீட்டில் குழந்தைகளிற்கு முன்னால் புகை பிடிப்பதை முற்றாக தவிர்க்க வேண்டும். ஏனெனில் பெரியவர்களின் பழக்க வழக்கத்தை குழந்தைகள் இலகுவாகக் கடைப்பிடிக்க முற்படுவார்கள் என்பது மட்டுமல்லாமல், சிகரெட் புகையில் ஒரு பகுதியை உட்சுவாசிக்கவும் செய்கின்றார்கள்.

### 4) ஒழுங்காக உடற்பயிற்சி திட்டமிட்டபடி செய்தல்

செய்யும் பயிற்சியானது இரண்டுவகைக்குரியதாக இரு

(7ஆம் பக்கம் பார்க்க)

## சடங்கு

''வேறை ஆரைக் கேட்கப் போறியள். தம்பி சுப்பிரமணியத்தை கேளுங்கோவன்'' என்றாள் அவள்.

''கேட்டனான். தன்ரை மகளுக்கு அடுத்த கிழமை கலியாணமாம். அதாலைதான் கொள்ளி வைச்சா பிறகு ஒண்டும் செய்யேலாதாம்'' பரமசாமியர் தெரிவித்தார். அப்ப ஆரைப் பிடித்து கொள்ளி வைக்கப் பண்ணலாம் என்ற சிந்தனையில் அவ்விடத்தில் மௌனம் நிலவியது. நிமிடங்கள் யுகங்களாய் கரைந்தன.

''மோகன் ...... தம்பி ...... மோகன்'' பரபரப்புடன் வீட்டிற்குள் புகுந்தார் சுப்பிரமணியத்தார்.

''என்ன இங்க வந்து மினக்கெடுறியள். அங்கைஎல்லாரும் பார்த்துக் கொண்டெல்லே நிக்கினம்'' வந்ததும் வராததுமாய் அவர் விளம்பினார்.

''அதுதான் அண்ணை...... கடமை செய்யிறது ஆரண்ணை''

இனிஒண்டும் செய்யேலாது வாத்தியார். அவன் கந்தன் நிற்கிறான். அவனோடை கதைச்சன் ஓமெண்டுசொன்னவன்.''

''ஆர் கந்தன்.'' பரமசாமியர் வியப்புடன் கேள்வி தொடுத்தார்.

''அது வாத்தியார் ...... பொன்னன்ர மகன்''

''எந்தப் பொன்னன்''

''மடத்தடியில் வைச்சு புருஷனையும், பெண்சாதியையும் இந்தியன் ஆமி சுடேல்லையே அந்தப் பொன்னன். அவன்ரை மேன் கந்தன். வீடுவழிய கூலிவேலை செய்து கொண்டு திரியுறான்'' சுப்பிரமணியர் நீட்டிக் கொண்டு போனார்.

''அவன் ஓமெண்டு வருவானோ?''

''நான் கேக்கேக்கை பஞ்சிப் பட்டவன்தான். எட ஏதாவது தரலாம் எண்டு சொன்னன் ஓமண்டிட்டான். ஆனா......''

''பேந்து என்ன இழுக்கிறியள்'' பரமசாமியர் கேட்டார்.

''அவன் 5000ரூபாய் வேணுமாம். நிண்டவையும் அது குடுக்கத்தானே வேணும் எண்டு சொல்லினம். அவனுக்கு அது காணும். இப்ப காசு தந்தால்தான் வைப்பன்எண்டு நிற்கிறான்.''

''சரி...... சரிஇனிக் காசைப் பார்த்து ஒண்டும் செய்யேலாது'' என்றான் மோகன். பரமசாமியர் திகைத்துப் போய் நின்றார்.

பாண்டயுமின்றி படாடோபமுமின்றி பொன்னையரின் சடலம் சுடலையை நோக்கி சென்று கொண்டிருந்தது

# தரையிலிருந்து கடலுக்கு விரியும் போர் முனை

கடற் புலிகள் கடந்த வாரத்தில் இரு பெரும் தாக்குதல்களை சிறிலங்கா கடற்படையினர் மீது நடத்தியுள்ளனர். வெற்றிகரமான இவ்விரு தாக்குதல்களும் தமிழீழ விடுதலைப் போருக்கு புதிய பரிணாமம் ஒன்றைக் கொடுத்துள்ளதோடு. சிறிலங்கா ஆயுதப் படையினருடனான மோதலை தரையில் இருந்துகடல்வரையிலும் விரிவுபடுத்தியுள்ளது.

இதற்கு முன்னரே வடபகுதிக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையுடன் கடற்புலிகள் பல தடவைகள்மோதலில் ஈடுபட்டுள்ளனர். சில கரும்புலித் தாக்குதல்களும் இடம் பெற்றன. இதில் பல வெற்றிகளையும் பெற்றுள்ளனர். இவ்வாறு இருப்பினும், கடந்த 26ஆம் திகதி யாழ்ப்பாணக் கடல் நீரேரிப் பகுதியில் சிறிலங்கா கடற்படையின் கரையோர ரோந்துப் படகுகள் மீது மேற்கொண்ட தாக்குதலும், 29-ம் திகதி பருத்தித்துறைக் கடற்பரப்பில் ஆழ் கடல் ரோந்துப் படகான சுப்பர் டோறா'' பீரங்கிப் படகு மீது மேற்கொண்ட தாக்குதலும், கடற்போரில் ஒரு புதிய பரிணாமம் ஒன்றைஉருவாக்கியுள்ளதுஎன்பது மிகையானதல்ல.

ஏனெனில், இவ்இருமோதல்களும் கடற்பரப்பில் பல மணி நேரம் இடம் பெற்றவையாகும். 26ஆம் திகதி கடல்நீரேரியில் இடம் பெற்ற மோதல்களில் சிறிலங்கா கடற்படைக்குச் சொந்தமான, p-155 p-117 p-120, p-121, p-122. ஆகிய இலக்கங்களை உடைய ஐந்து நீருந்து விசைப்படகுகள் பங்கு பற்றின. கடற்புலிகளின் படகுகளும் அதே அளவில் இம் மோதலில் பங்கு பற்றின. அதிகாலை 1. 30 மணியளவில் ஆரம்பித்த இம் மோதலானது. சுமார் காலை 5 00 மணி வரையும் நீடித்தது. இம் மோதலில் p-115, p-121 இலக்கமுடைய படகுகளை சிறிலங்கா இழந்தது.

இதேவேளை, பருத்தித்துறைக் கடலில் 'சுப்பர் டோறா" படகுடனான மோதலும், ஒரு மணித்தியாலத்திற்கு மேல் நீடித்தது. விடுதலைப் புலிகளின் நான்கு படகுகள் 'சுப்பர் டோறா'வை வழிமறித்தனவாயினும் சகல வசதியும் வேகமும கொண்ட 'சுப்பர் டோறா" ஒரு பலம் பொருந்திய எதிரி என்பதில் கேள்விக்கே இடமில்லை நிமிடத்திற்கு எண்ணூறு பீரங்கிக் குண்டுகளைசுமர் 4.39கிலோ மீற்றர் தூரத்திற்கு ஏவக்கூடிய 20 எம்.எம். பீரங்கிகள் இரண்டையும், இரண்டு நவீன 50 கலிபர் கனரக துப்பாக்கிகளையும் ஏனைய டாடர் வசதிகளையும் கொண்ட பீரங்கிப் படகுடனான மோதல் சாதாரணமான தொன்றல்ல. அத்தோடு, இம்மோதலானது பகலில் இடம் பெற்றமையானது மேலும் இதன் முக்கியத்துவத்தை அதிகப்படுத்தியுள்ளது.

அதாவது, முன்னரைப் போல், அல்லாமல் கடற்பரப்பில் தரித்து நின்று பல மணி நேரத்திற்கு மோதும் வல்லமையைக் கடற்புலிகள் பெற்றுள்ளனர். இது கடற்போரில் புலிகள் பெற்றுள்ள வளர்ச்சியைக் காட்டுவதாகும். அதேவேளை, சிறிலங்காகடற்படை தனது கடற்பரப்பு மீதான கட்டுப்பாட்டை இழந்துவருவதற்கான ஆரம்பமும் ஆகும்.

யாழ். கடல் நீரேரியில், கடற்புலிகளின் தாக்குதலுக்குள்ளான 'நீருந்து விசைப் படகு' கடலோர ரோந்திற்கென சிறிலங்கா கடற்படையில் விசேடமாக இணைக்கப்பட்டதாகும். மிகவும் ஆழம் குறைந்த (சுமார் ஒரு அடி) பகுதியிலும் மிதக்கக்கூடியஇப்படகானது, யாழ். கடல் நீரேரி போன்றஆழம்குறைந்த பகுதிகளில் ரோந்து நடவடிக்கைகளைப் பயன் படுத்துவதற்கென முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் கிளான்சி பெர்னான்டோவால் கடற்படையிற் சேர்த்துக் கொள்ளப்பட்டதாகும்.

இரண்டாம்கட்டஈழப்போர் ஆரம்பித்த பின் விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்பண்ணுவதற்கென விசேடமாக இவ் நீருந்து விசைப்படகுகள் கடற்படையில் சேர்க்கப்பட்டன. முன்னாள் கடற்படைத் தளபதி கிளான்சி பெர்னான்டோவின் கடற்படையை நவீனப் படுத்தும் திட்டத்தின் ஓர் அம்சமாகவும் இது இருந்தது.

உள்நாட்டு படகு வார்ப்புடன், வெளிநாட்டு இயந்திரங்களும் இணைக்கப்பட்ட இப் படகுகள் கடற்படையின் சேவையில் இணைக்கப்பட்ட போது கரையோரக் கட்டுப்பாடு கடற்படையின் கைகளில் கொண்டுவரப்பட்டதாகக் கருதப்பட்டது. குறிப்பாக யாழ்ப்பாணக் கடல் நீரேரியின் கட்டுப்பாடும், விடுதலைப் புலிகளின் வடக்கு கிழக்கிற்கான கரையோர கடற்போக்குவரத்துப் பாதையும் கட்டுப்பட்டதாக எண்ணப்பட்டது.

இதன் மூலம், யாழ். குடாநாட்டின் மீதான இராணுவ முற்றுகை பூர்த்தி அடைந்ததாகவும், கிழக்கு மாகாணத்திற்கான விநியோக வழிகளும் துண்டிக்கப்பட்டதாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களில் கணிக்கப்பட்டது.

இதேவேளை, ஆழ்கடல் ரோந்தில் ஈடுபடவல்ல 'சுப்பர் டோறா'' படகுகள் 1985 ஆம் ஆண்டுக்கும் 1987ஆம் ஆண்டுக்கும் இடையில் சிறிலங்கா கடற்படையில் சேர்க்கப்பட்டன. இந்தியாவிற்கும் வடபகுதிக்கும் இடையில் போராளிகளின் போக்குவரத்தைத் தடுக்கவும் விடுதலைப் புலிகளுக்கான ஆயுத வழிபோக வழிகளைத்துண்டிக்கும் நோக்கம் கொண்டும் இப்படகுகள் இணைக்கப்பட்டவையாகும். அப்போதைய தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி இப் படகை இஸ்ரேலில் இருந்து கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டினார்.

இச் 'சுப்பர் டோறா' படகுகள் எதிரிகளின் கப்பல்களைத் துரத்திப் பிடித்தல், யுத்த தப்பிரதேசங்கள்.கடற் பிரதேசங்களைப் பாதுகாத்தல் இரவு ரோந்தில் ஈடுபடுதல், உளவு வேலையில் ஈடுபடுதல், பெரிய கப்பல்களுக்கு பாதுகாப்பு கொடுத்தல் ஆகிய பல்வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தும் நோக்கில் சேர்க்கப்பட்டன இந்நிலையில் கரையோரப் பாதுகாப்பு விடுதலைப்புலிகளின் படகுகளைத் துரத்திப் பிடித்தல் அல்லது அழித்துவிடுதல் என்றநோக்கில் இவற்றின் செயற்பாடு பிரதான பங்காற்றியது. இப் படகானது பாக்கு நீரிணையிலும், வங்காள விரிகுடாவிலும் பிரதானமாகச் செயற்பட்டது. இதனால் கடற்பரப்பில் விடுதலைப் புலிகள் சந்திக்கவேண்டியும் இருந்தது.

இவ்வாறாக நீருந்து விசைப் படகு, 'சுப்பர் டோறா' பீரங்கிப்படகு ஆகியவைசிறிலங்கா இராணுவத்தின் போர் யுத்திகளில் முக்கியமான பங்காளிகள் ஆயின. இந்நிலையில் இவ் இரண்டு வகையான படகுகள் மீதும் விடுதலைப் புலிகள் வெற்றிகரமான தாக்குதலை மேற்கொண்டு மூழ்கடித்தமையானது சிறிலங்கா கடற்படையின் போர் யுத்திகளுக்குக் கொடுத்த பலமான அடியாகும். இதன் மூலம் சிறிலங்கா கடற்படை இரண்டாம் கட்ட ஈழப் போருக்கென வகுத்திருந்த போர் யுத்தி ஆட்டம் கண்டுள்ளது என்பதே நிதர்சனமாகும்.

நீருந்து விசைப்படகு அறிமுகமாக்கப்பட்டமையானது அதன் வேகத்திற்கும், ஆழம்குறைந்த கடற்பரப்பில் மிதந்து செல்லக்கூடியதும் என்ற காரணங்களுக்காகவே ஆகும்: ஆனால் இன்று கடற்புலிகளின் படகுகள் நீருந்து விசைப்படகுகளை வழிமறிக்கவும், அவற்றைத் தாக்கி அழிக்கும் சக்தி கொண்டவையாக உள்ளன. இதன் காரணமாக பூநகரிப்பகுதியில் உள்ள நாகதேவன் துறையில்

**ஜெயராஜ்**

இருந்து ஆனையிறவு வரையிலான 20 மைல் நீளமான கடற்பரப்பில் நீருந்துவிசைப்படகுகளின் மூலம் காவல்செய்வதும் அதன் மூலம் யாழ் குடாநாட்டின் மீதான முற்றுகையை இறுக்கமடையச் செய்வதுமானசிறிலங்கா கடற்படையின் முயற்சி தோல்வி கண்டுள்ளது சுருக்கமாகக் கூறின் கிளாலிக் கடற்பரப்பில் கடற்புலிகளின் கை வலுவடைந்துள்ளதோடு யாழ்ப்பாண முற்றுகையும் முறியடிக்கப்பட்டுள்ளதெனலாம்.

இதைவிட 'சுப்பர் டோறா' ரோந்துப்படகை கடற்புலிகள் மூழ்கடித்தமையானது ஆழ் கடல் ரோந்தின் மூலம் விடுதலைப்புலிகளின் வெளியுலகத் தொடர்பைக் கட்டுப்படுத்தும் சிறிலங்கா கடற்படையின் முயற்சிக்கு ஒரு சவால் விடுக்கப்பட்டுள்ளது என்பதே உண்மை. இதுவரை போர் நடவடிக்கையில் சுப்பர் டோறா ஆற்றி வந்த பங்கினை இனிமேலும் சிறப்புற மேற்கொள்ள முடியுமா என்பதும் கேள்விக்குரியதே.

''சுப்பர் டோறாப் படகானது உலகில் அங்கீகரிக்கப் பெற்ற ரோந்து படகுகள் வரிசையைச் சேர்ந்ததாகும். அப்படகை கடற்புலிகளால் வழிமடக்கித் தாக்க முடியும் என்பதும் அழித்து விட முடியும் என்பதும் இனிமேல் ஆழ்கடல் ரோந்தை மீறி விடுதலைப் புலிகளால் செயற்பட முடியும் என்பதைக் காட்டுவதாகவே உள்ளது.

இந்நிலையில் கடற்புலிகள் கடந்தவார இறுதியில் மேற்கொண்ட இருவெற்றிகரமான தாக்குதல்களும்கடற்படைக்கு இருபத்திரண்டு கடற் படையினரையும், பலகோடி ரூபா பெறுமதியான படகுகள். மற்றும் கனரக ஆயுதங்களின் இழப்பை மட்டும் ஏற்படுத்தவில்லை. இரண்டாம் கட்ட ஈழப்போரில் சிறிலங்கா கடற்படை கடைப்பிடித்து வரும் கடற்போர் யுக்திகளையே தோற்கடித்த தொன்றாகும்.

அதாவது மண்கிண்டி மலை இராணுவ முகாம் தகர்ப்பானது சிறிலங்கா இராணுவத்தின் போர் யுக்திகளை மீள் பரிசீலனை செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தி

இத் தாக்குதல்கள் மூலம்சிறிலங்காகடற் படையானது. வடக்குகடற்பரப்பில்தனது சுதந்திரமான நடமாட்டத்தை இழந்துள்ளது என்பதோடு கடற்படைப் படகுகள் பீரங்கிப் படகுகள் என்பனவற்றின் தனியான நடமாட்டமும் கேள்விக்குரிய தொன்றாக ஆக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக இனிமேல் கடற்படையின் ரோந்து என்பது பீரங்கிப்படகுகள் உட்பட பலபடகுகள் இணைந்து அணிகளாகவும், அல்லது விமானப் படையுடன் கூட்டாக மேற்கொள்ளப் படக்கூடிய ஒரு நிர்ப்பந்தத்தை சிறிலங்கா கடற்படைக்கு ஏற்படுத்தும் அவலத்தை ஏற்படுத்தி

யுள்ளதென்றால். அதே போன்ற தொருநிர்ப்பந்தத்தை கடற்புலிகளின் யாழ் கடல் நீரேரியில் நீருந்து விசைப் படகுகள் மீதான தாக்குதல்களும், பருத்தித்துறைக் கடற்பரப்பில், 'சுப்பர் டோறா' மீதான தாக்குதலும் ஏற்படுத்தியுள்ளன என்பதில் தவறில்லை.

யுள்ளது. அத்தோடு யாழ் கடல் நீரேரி போன்ற ஆழம் குறைந்த கடற்பரப்புக்களில், கடற்படையின் நடமாட்டமென்பது கடற்புலிகளைச் சந்திக்காத வேளைகளிலேயே பாதுகாப்பான தொன்றாக அவர்களுக்கு இருக்க முடியும்.




## நீருந்து விசைப்படகு

| | |
|---|---|
| படகின் நீளம் | 18·5 மீற்றர் |
| படகின் குத்துயரம் | 1·0 மீற்றர் |
| படகின் அகலம் | 8 0 மீற்றர் |
| கபின் உயரம் | 2 25 மீற்றர் |
| கபின் அகலம் | 160 செ. மீற்றர் |
| படகின் வேகம் | 40 கடல் மைல் |

இப்படகில் 250 குதிரை வலுவுடைய இரண்டு இயந்திரங்கள் இணைக்கப்பட்டுள்ளன இவை அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்பட்டவையாகும். இப்படகு ஒருஅடி ஆழத்திலும் மிதக்கக் கூடியதாகும்.

## சுப்பர் டோறா

| | |
|---|---|
| படகின் அண்ணளவான நீளம்:- | 41 அடி |
| படகின் அண்ணளவான அகலம்:- | 15 அடி |
| படகின் ஆகக்கூடிய வேகம்:- | மணிக்கு 66. 67 கிலோ மீற்றர் |
| படகின் சாதாரண வேகம்:- | மணிக்கு 61. 29 கிலோ மீற்றர், |
| படகு ஒரு செக்கனிற்கு நகரும் தூரம்:- | 17. 025 மீற்றர் |
| படகின வேகம் (கடல் மைல்களில):- | 35-40 கடல் மைல் |

**படகில் பொருத்தப்பட்டுள்ள ஆயுத தளபாடங்கள்:-**

ஒற்றைகுழல், ''ஒவர்லிங்கன்'' 20 மி.மீ பீரங்கி:- 02
50 கலிபர் விமான வெதிர்ப்பு பீரங்கி - 02
இயந்திர துப்பாக்கிகள்

**படகில் பொருத்தப்பட்ட ஏனைய சாதனங்கள்:-**

''டொக்கா'' - 01
வி. எச். எவ் தொலைதொடர்பு சாதனம் - 01
ஜெனரேற்றர் - 02
எஞ்ஜின் - 02
8' நீளமான சிறிய படகு - 01 (சிலவேளைகளில் இராது]
திசையறிகருவிகள் - 02
''கி. கியூ ஆர்'' நங்கூரம் - 01

# வடபகுதி கடற்படை மீது தாக்குதல் தொடரலாம்

## அதிகாரிகள் ஒப்புக்கொள்கின்றனராம்

(கொழும்பு)

கிளாலிக்கடலில் கடற்படையினருக்கும் கடற்புலிகளுக்கும் இடையே அடிக்கடி மோதல் நடைபெறுவதுண்டு ஆனால் இறுதியாக அங்கு நடந்த தாக்குதலை யாருமே எதிர் பார்க்கவில்லை என சாமிந்திரா பெர்டினான்டோ என்ற விமர்சகர் சண்டே ஐலண்டில் குறிப்பிட்டுள்ளார்.

கிளாலி தாக்குதல் மேலும் சில பிரச்சினைகளை உருவாக்கும் என்பதை படை அதிகாரிகள் ஏற்றுக்கொள்கின்றனர். வடபகுதியில் கடற்படை மீது புலிகள் நடத்த உள்ள தொடரான தாக்குதல்களின் ஆரம்பமே இது என அவர்கள் ஒத்துக்கொள்கின்றனர் என அவ்விமர்சகர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# திடீரென வெளிப்பட்ட கடற்புலிகள் கடற்படைப் படகுகளை தாக்கினர்

## கிளாலி மோதல் குறித்து ஐலன்ட் விபரிப்பு

(கொழும்பு)

கிளாலி கடற்பரப்பில் படகுகள் அணி ஒன்று சென்று கொண்டிருப்பதை நாகதேவன் துறையில் உள்ள கடற்படை ரேடாரில் தெரிந்ததும் அவற்றை வழிமறிக்க அந்த கடற்படைத் தளத்திலிருந்து ஐந்து நீருந்து விசைப்படகுகள் விரைந்தன. பி (P) 115, 117, 120, 121, 122 எனும் கடற்படை இலக்கங்கள் கொண்ட இப் படகுகள் அந்த படகுகள் அணியை நெருங்கியதும் அவற்றிற்கு இடையே வந்துகொண்டிருந்த கடற்புலிகளின் படகுகள் திடீரென வெளிப்பட்டு கடற்படை படகுகள் மீது தாக்குதலை ஆரம்பித்தன. இவ்வாறு கடந்த 25ஆம் திகதி கிளாலி கடலில் கடற்படையினரின் இரு நீருந்து விசைப் படகுகள் கடற்புலிகளால் அழிக்கப்பட்ட சம்பவத்தை ஐலன்ட் பத்திரிகை விபரித்துள்ளது.

கடற்படையும், கடற்புலிகளும் தமது 50 கலிபர் துப்பாக்கிகளைக்கொண்டு நடுக்கடலில் மோதிக்கொண்டிருந்த வேளை சப் லெப்டினன்ட் டபிள்யூ. எச். கே. என். லங்காதிலக்க தலைமையிலான P 115 என்ற கடற்படைப் படகு கடற்புலிகளால் முற்றாக சுற்றிவளைக்கப்பட்டது. சிலநிமிட மோதலில் அப்படகு நீரினுள் அமிழ்ந்தது. ஒரு கடற்படை படகை இழந்த நிலையில் மோதல் தொடர்ந்தது. இந்நிலையில் எஞ்சிய கடற்படைப் படகுகளுக்கு வெடிமருந்து பற்றாக்குறை ஏற்பட்டது. இதனால் ஒன்று மாறி ஒன்றாக கரைக்குச் சென்று ஆயுதங்களை தேவையான அளவு பெற்றதோடு போரில் காயமடைந்தவர்களைக் கரையில் இறக்கி புதியவர்களுடன் போர்க்களத்திற்கு திரும்பின. இந்நிலையில் அதிகாலை 4-30 மணியளவில் கடற்புலிகளின் தாக்குதலுக்கு P 121 என்ற கடற்படைப் படகு இலக்கானது. படகு இரண்டு பகுதிகளாக பிளந்து நீரில் அமிழ்ந்தது. இரு பகுதிகளினதும் முனைகள் நீரினுள் வெளித்தள்ளியபடி காணப்பட்டது. அப் படகிலிருந்த லெப்டினன்ட் எஸ். மகவித்தான உயிர்தப்பித்துக்கொண்டார்.

காலையில் தாக்குதல்களை நிறுத்திவிட்டு புலிகளின் படகுகள் திரும்பிவிட்டன. பின்னர் கடற்பரப்பில் கடற்படை நடத்திய தேடுதலில் மூழ்கடிக்கப்பட்ட P 121 படகின் சில பகுதிகள் மற்றும் சப் லெப்டினன்ட் லங்காதிலக உட்பட ஐந்து கடற்படையினரின் சடலங்கள் மீட்கப்பட்டன கரையிலிருந்தும் புலிகள் கடற்படைமீது தாக்குதல் நடத்தினர்.

கிளாலி மோதலையடுத்து அப்போது விடுமுறையில் கொழும்பு சென்றிருந்த வடபகுதி கடற்படைத் தளபதி கப்டன் டி. டபிள்யூ. கே. சந்தகிரி மற்றும் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் மோகான் சமரசேகர ஆகியோர் நாகதேவன் துறை கடற்படை முகாமிற்கு விரைந்தனர் என இச் சம்பவம் குறித்து ஐலன்டில் விபரிக்கப்பட்டுள்ளது.

வடபகுதி

வரும் நடத்துனரான உடுவில் கிழக்கைச் சேர்ந்த பி. சுரேன் என்பவரும் படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

லொறி தடுத்து வைக்கப்பட்டிருப்பதற்கான காரணம் தெரியவரவில்லை.

# மண்ணெய் விநியோகம்

1993/94 காலபோக நெற்செய்கையாளர்களுக்கு நெற்செய்கையை ஊக்குவிக்கும் நோக்குடன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன வட்டத் தொடர்பாளர் அலுவலகங்களில் வைத்து இன்று தொடக்கம் மண்ணெண்ணெய் வழங்குவதற்கான நடவடிக்கையினை யாழ். மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

மண்ணெண்ணையைப் பெற்றுக்கொள்ள விரும்பும் நெற்செய்கையாளர்கள் நெற்செய்கையினை மேற்கொள்ளும் பரப்பளவு உட்பட சகல தகவல்களையும் உரிய முறையில் வழங்குவதுடன் தங்களது குடும்பப் பதிவு அட்டை மூலம் மண்ணெண்ணையை பெற்றுக் கொள்ளலாம்.

புலிகள

சிறிலங்காவிமானப்படைஉயர் அதிகாரிகளுக்குத் தெரிய வந்துள்ளதாக சண்டே ரைம்ஸ் மேலும் தெரிவிக்கிறது. பாரம் குறைந்த இந்தச் சிறிய ரக விமானத்தைக் கொண்டு முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட சில இலக்குகளின் மீது புலிகள் வான்தாக்குதல் நடத்தத் திட்டம் வகுத்திருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.

ஆண்டில் யாழ். பல்கலைக்கழகம்பிரிட்டிஸ் பிளாக்வெல்ஸ் நூல் விநியோகஸ்தர்களிடமிருந்து கொள்வனவு செய்தமேற்படி நூல்கள் இது வரைவந்து சேராதது குறித்து யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பல தடவைகள் தபால்மாஅதிபருக்கு கடிதம் எழுதியும் எது விதபலனும் கிடைக்கவில்லை.

திடீர் என கொழும்பிலுள்ள 'அகடமி புக்சேர்விஸ்' ஸ்தாபனத்தாரிடமிருந்து யாழ். துணைவேந்தருக்கு வந்த கடிதத்தில் யாழ் பல்கலைக் கழகத்திற்கு விலாசமிடப்பட்ட சில புத்தக பொதிகள் மாளிகாவத்த நீதிமன்றத்தில் திருட்டு வழக்கொன்றில் தடயப் பொருளாக சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

திருட்டுப் போன புத்தகப் பொதிகளில் ஓர் இலட்சம் ரூபா பெறுமதியான புத்தகம் பொலிஸாரால் மீட்கப்பட்டு இப்புத்தகப் பொதிகளை கையாடிய தபால் திணைக்கள பொதி அறை ஊழியர்கள் மூவருக்கு எதிராக மாளிகாவத்த நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது குறித்து யாழ் துணைவேந்தருக்கு தெரிவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

துணைவேந்தரின் அறிவுறுத்தலுடன் யாழ். பல்கலைக்கழக நூலக சேவை உதவிப் பதிவாளர் கொழும்பு புறப்பட்டு வழக்கறிஞர்களின் அனுசரணையுடன் கைப்பற்றப்பட்ட பொதிகளைப் பார்வையிட்டபோது அவை 90ஆம் ஆண்டில் தருவிக்கப்பட்டஒரு பகுதி நூல்கள் என்று தெரிய வந்தது.

# வவுனியாஅகதிகள்முகாமில் இடமில்லையாம்

தமிழ் நாட்டிலிருந்து தாயகம் திரும்பிவரும் அகதிகளை தங்கவைப்பதற்கு வடபகுதி அகதிமுகாம்களில் இடப்பற்றாக்குறை நிலவுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாயகம் திரும்பும் வடபகுதி அகதிகளை தற்காலிகமாக தங்கவைப்பதர்கான ஆசிகுளம், வேப்பங்குளம் அகதி முகாம்களுக்கு இனிமேல் அகதிகளை அனுப்பிவைக்க வேண்டாமென திருக்கோணமலையில் உள்ள அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

வவுனியா அகதிமுகாம்களில் இடமில்லாததே இதற்கான காரணமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் வடபகுதி அகதிகளை தங்கவைப்பதில் பெரும் திண்டாட்டம் ஏற்பட்டுள்ளது.

# பரிசளிப்பு விழா

யாழ். இந்துமகளிர் கல்லூரியின் பரிசளிப்பு விழாவும் கல்விக் கண்காட்சியும் இன்று காலை 9 00 மணிக்கு இடம்பெறும். பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக கலைப் பீடாதிபதியும் பதில் துணைவேந்தருமான கலாநிதி பொ. பாலசுந்தரம்பிள்ளையும் சிறப்பு விருந்தினராக கல்வி மேம்பாட்டுக்கழக பொறுப்பாளர் வெ. இளங்குமரனும் கலந்து கொள்வர்.

குற்றஞ்

டனை வழங்கினாலும் தான் ஏற்கத் தயாராக இருப்பதாக மேற்படி வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட முருகன் தெரிவித்துள்ளார்.

# சங்கீத ஆசிரிய சேவைப் பயிற்சி

இன்று முதல் எதிர் வரும் 11 ஆம் திகதி வரை திட்டமிட்டபடி சங்கீத ஆசிரியர்களுக்கான தவணை முன் திட்டமிடல் செயலமர்வு பின்வரும் கல்வி கோட்ட ரீதியாக நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இன்று காலை 8 30 க்கு பருத்தித்துறை கல்வி கோட்டத்தில் வட இந்து மகளிர் கல்லூரி, 6 ஆம் திகதி பண்டத்தரிப்பு கோட்டத்தில் மானிப்பாய் இந்து கல்லூரி, 7ஆம் திகதி யாழ்: கோட்டத்தில் யாழ். இந்துக் கல்லூரி, 9ஆம் திகதி சாவகச்சேரியில் சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலயம், 10ஆம் திகதி வேலணைகோட்டத்தில் சென் ஜோன்ஸ் அக்கடமி, 11ஆம் திகதி மருதனார்மட கோட்டம் இராமநாதன் கல்லூரி மண்டபம்.


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 02-09-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 10773

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கம்: 28-0425.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

24-7672, 26-0673, 24-4465, 42-0733, 26-4376,
26-3582, 26-2108, 24-6533, 41-1665, 28-9634,
26-7307, 27-6762, 26-1461, 27-2143' 28-1901,

## மரண அறிவித்தல்கள்

செல்வி

### சிறீஸ்கந்தராசா சுதர்ணராஜி

மயிலிட்டியைச் சேர்ந்த செல்வி சிறீஸ்கந்தராசா சுதர்ணராஜி வவுனியாவில் கடந்த 20 ஆம் திகதி காலமானார். இறுதிக் கிரியைகள் வவுனியாவில் நடைபெற்றதென்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தற்போதைய முகவரி:-
நா. மு. ஒழுங்கை,
பருத்தித்துறை.
01-09-1993

தகவல்:
சி. சறோஜா
(தாய்)
(5822)

### கனகரெட்னம் ஜெயகாந்

சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை மாணவன் (ஆண்டு - 5) கனகரெட்னம் ஜெயகாந் 31-08-93-ல் கொழும்பில் காலமானார். இவர் பொ. கனகரெட்னம்-சறோஜினி தம்பதிகளின் அன்பு மகனும், ஜெயலதா, சுதாகர், சாளினா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 04-09-93 அன்று கொழும்பில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

கண்டி வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி

பொ. கனகரெட்னம்,
(தந்தை)
கனகு கராஜ், திருநெல்வேலி.
(5825)

யாழ் நகர் ஸ்ரீதர் திரையரங்கில்

"Battle of the Bulge"

பல்ஜ் சமர்

(தமிழாக்கம்)

டாங்கிகள் மூலம் மோதிக்கொள்ளும் பயங்கர சண்டைக் காட்சிகள் நிறைந்த படம்

தினசரி மாலை 4.00 மணி, 6.00 மணி

சனி, ஞாயிறு தினங்களில்
காலை 10.30 மணி,
மாலை 4.00 மணி, 6. 00மணி (சி-7114

வறிய மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக
விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு
யாழ். கல்வி கோட்டத்தினர் நடாத்தும்

## கலை நிகழ்ச்சிகள்

காலம்: 03-09 1993 இன்று பி. ப. 8-00 மணி
இடம்: யா/வைத்தீஸ்வரா கல்லூரிமைதானம்

நிகழ்ச்சி விபரம்

★ யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவிகளின்
பல்லியம்

★ யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகளின்
பண்டார வன்னியன்
(நாடகம்)

★ கராத்தே வித்தைகளில் கற்று தேறியவர்களின்
கராத்தே கண் காட்சிகள்

★ வசாவிளான் ம ம. வி. மாணவர்கள் வழங்கும்
காலத்தின் தரிசனம்
[குறியீட்டு நாடகம்]

★ மற்றும் புரட்சி பாடல்களின்
அபிநய நிகழ்ச்சிகள்

அனைவரையும்அன்புடன்வருகவருகஎன வரவேற்கின்றோம்
நன்றி

அன்பளிப்பு:- 10/- 15/-

இந் நிகழ்வு சிறப்புற அமைய எமது
வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

நியூ மாஸ்ரர் கல்வி நிறுவனம்
B. M. C. லேன் யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் பத்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில 1993-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 03ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.